விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆவணி 30 ஞாயிற்றுக்கிழமை (15.09.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 270

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# தெற்குப்போல் வடக்கிற்கும் அதிகாரம் வழங்குவேன்!

## ஜனாதிபதி யாழில் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையில் உள்ள மாகாணங்களிற்கு இருக்கக்கூடிய அனைத்து அதிகாரங்களையும் வடக்கு மாகாணத்திற்கும் அரசாங்கம் வழங்கும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (24ஆம் பக்கம் பார்க்க)

## வந்தது யாழ் தேவி




யாழ் தேவி ரயில் 23 வருடங்களின் பின்னர் கிளிநொச்சியை வந்தடைந்துள்ளது. இந்த ரயில் பயணத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தியோகபூர்வமாக நேற்று சனிக்கிழமை ஆரம்பித்து வைத்தார்.



சுன்னாகத்தில் அமைந்துள்ள உப மின் நிலையத்தில் கிளிநொச்சி - சுன்னாகம் மின்மாற்று செயற்திட்டத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்த போது ...

## ஆண்டவரையும் அழைத்து ஜனாதிபதி தேர்தல் பிரசாரம்!

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் ஆளும் ஐக்கிய மக்கள சுதந்திர கூட்டமைப்பிற்கான பலமான தேர்தல் பிரசார வியூகங்களில் தனது உரையினை வழங்கிக் கொண்டிருந்தார்.

இடையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளரான க.வி.விக்னேஸ்வரனை பற்றி விமர்சனங்களை வெளியிடும் போது ஆண்டவரே, கடவுளே என விளித்துப் பேசியுள்ளார்.

தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவரை (24ஆம் பக்கம் பார்க்க)

## ஆளும் கட்சியுடன் எண்மர் இணைவு

(யாழ்ப்பாணம்)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைபில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த முன்னாள் மற்றும் தற்போதைய பிரதேச சபை உறுப்பினர்களும், வேறு சிலருமாக 8 பேர் அரசாங்கத்துடன் நேற்று உத்தியோகபூர்வமாக இணைந்துள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச்சேர்ந்த 4 உறுப்பினர்களும், ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியைச் சேர்ந்த 2 உறுப்பினர்களும், சுயேட்சைக குழுவில் (24ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச விசாரணையை கோரும் அறிக்கை?

(ஜெனிவா)

இலங்கையில் யுத்தம் நடைபெற்ற போது இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என்ற யோசனை ஒன்று ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத்தில் முன்வைக்கப்பட உள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சர்வதேச விசாரணையை கோரும் இந்த யோசனை எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமை (24ஆம் பக்கம் பார்க்க)

## மேர்வினுக்கு மீண்டும் திருமண ஆசை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு திருமணம் செய்யும் அழைப்பை விடுத்து அதனை மறுத்த அமைச்சர் மேர்வின் சில்வா மற்றுமொரு திருமண யோசனையை முன்வைத்துள்ளார்.

பிரபல சிங்களத் திரைப்பட நடிகையும் ஆளும் கட்சியின் அரசியல்வாதியுமான கீதா குமாரசிங்கவுக்கு அவர் இந்த யோசனையை முன்வைத்தார். (02ஆம் பக்கம் பார்க்க)

## விண்வெளியில் கீரை நட நாசா திட்டம்

(வாஷிங்டன்)

விண்வெளி வீரர்கள் உணவுக்காக விண்வெளியில் கீரைகள் பயிரிட விண்வெளி ஆய்வு மையமான 'நாசா' திட்டமிட்டுள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா உட்பட பல நாடுகள் இணைந்து விண்ணில் சர்வதேச விண்வெளி ஆய்வுகூடம் அமைத்து வருகின்றனர். அதில் பணிபுரிய பூமியில் இருந்து விண்வெளி வீரர்கள் சென்று வருகின்றனர்.

விண்வெளிக்கு செல்லும் வீரர்களுக்கு விசேஷமாக தயாரிக்கப்பட்ட (23ஆம் பக்கம் பார்க்க)

ஐக்கிய தேசியக் கட்சி



தியாகராஜா துவாரகேஸ்வரன்
வடமாகாண சபை
முதலமைச்சர் வேட்பாளரும்
முதன்மை வேட்பாளரும்



X 5

வடமாகாண சபைத் தேர்தல் 2013
(கிளிநொச்சி மாவட்டம்)
இலங்கைத் தமிழரசுக் கட்சி

X 3

டாக்டர் கந்தசாமி
திருலோகமூர்த்தி



தமிழினத்தின்
தன்மானக் குரல்
கிளிநொச்சியின்
உரிமைக் குரல்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## மேர்வினுக்கு மீண்டும்...

குருணாகல் நிக்கவரெட்டிய பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய மேர்வின் சில்வா, கீதாவை பார்க்கும்போது திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இன்று தோன்றுகிறது. அவர் என்னை திருமணம் செய்திருந்தால் அவரது பெயர் கீதா குமாரசிங்க என்பதற்கு பதிலாக கீதா சில்வா என்று மாறியிருக்கும் எனக் கூறியுள்ளார்.

இந்த தேர்தல் கூட்டத்தில் கீதா குமாரசிங்கவும் கலந்து கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)





BSc (Hons) / BA (Hons) / BEng (Hons) / LLB (Hons)

BTEC HND
Full Time / Part Time

Foundation Course

O/L | After A/L

இலங்கையில் சர்வதேச உயர்கல்வி கற்கை நெறிகளை வழங்கும் மிகச்சிறந்த உயர்கல்வி நிறுவனம் எனும் Edexcel, UK நிறுவனத்தின் சான்றிதழுடன் வெற்றி நடைபோடும் BCAS Campus வழங்கும் Access Programme (Degree Foundation) எனும் பாடநெறியினை GCE A/L பரீட்சையினை எழுதி முடித்திருக்கும் மாணவர்களாகிய உங்களுக்கு கணனி, ஆங்கிலம் மற்றும் ஆளுமை விருத்தி போன்றவற்றில் திறமைகளை விருத்தி செய்வதற்கான முறையான பயிற்சியினைப் பெற்றுக் கொள்வதோடு 6 சர்வதேச வரவேற்பை பெற்ற சான்றிதழ்களையும் இப்பயிற்சி நெறி முடிவில் பெற்றுக் கொள்வதற்கான அரிய வாய்ப்பும் கிடைக்கின்றது.

அத்தோடு குறுகிய காலத்திற்குள் UK, USA, Australia, Canada போன்ற நாடுகளிலுள்ள பிரசித்தி பெற்ற பல்கலைக்கழகங்களினூடாக (Hons) Degree , பட்டப்படிப்புகளையும் பூர்த்தி செய்வதற்கான சந்தர்ப்பத்தை இதன் மூலம் இலகுவாக கிடைக்கிறது. (சி-4724)

**IELTS**

**Dip. in English**

கொழும்பிலிருந்து வருகை தரும் ஆங்கில ஆசிரியர்கள் மற்றும் ஐரோப்பிய ஆசிரியர்களின் நேரடி வழிகாட்டலில் முழுமையான ஆங்கிலச் சூழலில் பாடநெறிகள் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படுகின்றன | FREE Study Pack
உயர்கல்வி மற்றும் உயர்தரத்திற்கு பின்னரான கற்கை நெறி தொடர்பான இலவச ஆலோசனைகளுக்கு BCAS Jaffna Campus இனை நாடுங்கள்.

**5 Certificates by BCAS | 2 Certificates from Edexcel, UK**

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

**Jaffna Campus**
16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
T: 021 2219910 | E: info@bcas.lk
தொடர்புகளுக்கு **0777 102131**

MACRO 0777 799 588

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Qatar



நிரந்தர வேலைவாய்ப்பு துறைமுகத்திலும் விமானநிலையத்திலும் (தனியார்) வேலைவாய்ப்பு உண்டு. கப்பல் புனர்நிர்மாணித்தல் பிரிவில் சாதாரண ஊழியர்கள் / வெல்டர் / தச்சு / பெயின்டர் / விமான நிலையத்தில் (தனியார்) சுத்திகரிப்பாளர் கேடரிஸ் பிரிவிலும் வெற்றிடங்கள் 18 - 50 ஆண், பெண் இருபாலாரும் தேவை.
சம்பளம் 18000/-, 35000/-, 45000/- என தொழில் அடிப்படையில் வழங்கப்படும். உணவு, தங்குமிடம் சகாய விலைகளில். வருகை தரும் நாளிலே வேலை.

தொடர்பு : **0775561883** (C-4716)



**வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:**
T.P : 021 321 0815, 021 567 1532
E-mail : valampurii@yahoo.com, valampurijaffna@gmail.com



கட்டட நிர்மாணத்துறையில் நீங்கள் தேர்ச்சி பெற்றவராயின் கொழும்பு / யாழ் / விஸ்வமடு போன்ற இடங்களில் (கட்டடங்கள் / வாய்க்கால் / வாவி) வெற்றிடங்கள். மேசன் / கையுதவியாளர்/ தச்சு / பெயின்டர் / செடலின் பாஸ் தேவை. தொழில் அடிப்படையில் சம்பளம், 25,000/-, 40,000/- என வழங்கப்படும் உணவு, தங்குமிடம் உண்டு.

தொடர்பு :
**077-5561883** (C-4715)
காரியாலயம் வவுனியா

வவுனியாவில் உள்ள எமது உப அலுவலகத்திற்கு சிங்கள அறிவுடைய தமிழ் பெண் எழுதுவினைஞராக தேவை. சம்பளம் 12,000/= பயிற்சிகள் வழங்கப்படும். வவுனியாவில் உள்ளோர் விரும்பத்தக்கது. வயது 20 – 28 விசேடம் (தனியார் வகுப்பிற்குச் செல்லாதோர்.)

தொடர்பு :
**077-5561883** (C-4718)
வவுனியா காரியாலயம்

### Office கிளார்க் தேவை

*Travel's* கிளார்க்காக வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை.

**தொடர்பு:**
**077 225 9030** (3956)

### பெயர் மாற்றம்

முருகன் வீதி, கல்மடு நகர், கிளிநொச்சி எனும் முகவரியுடைய சபாபதிப்பிள்ளை சோமசுந்தரம் ஆகிய நான் 15.09.2013 முதல் சபாபதிப் பிள்ளை அஜருகன் எனும் பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

(3952) **ச.அஜருகன்**

### காணி விற்பனைக்கு

கந்தர்மடம் அரசடி வீதி, திருவள்ளுவர் ஒழுங்கையில் நன்னீர் கிணற்றுடன் கூடிய 2 1/4 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**தொடர்பு:**
**075 060 9358** (3954)

### தேவை

அலுவலக உதவியாளர் பெண் தேவை. குடும்பத்தலைவியாக உள்ள பெண்கள் விரும்பத்தக்கது. ஏனையோரும் விண்ணப்பிக்கலாம்.

**தொடர்பு: 071 611 6305** (3949)



மகளிரின் எதிர்கால வாழ்க்கைக்கான ஒரு வழிகாட்டியாக
1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....



யாழ். **கலாலயா**
பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)
Yaarl **Kalaa layah** Academy
Victoriya Road, Jaffna

**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

✌ கேக் ஐசிங், உணவு தயாரித்தல் ✌ *Hair Dressing & Styling* (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும் ✌ முக அழகுக் கலை (Facial) ✌ Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்) **Nail art,** மெஹந்தி போடுதல் ✌ இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல், ✌ (B)பிளவ்ஸ், சாறி (B) பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் தையல் பயிற்சிகள்.

**ஆரம்பமாக உள்ள கிழமை நாள் /சனி ஞாயிறு புதிய பிரிவுகளில் சேர விரும்புவோர் நேரில் வந்து விபரங்களை கேட்டு அறிந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.**

இயக்குநர்



### வகுப்பு

உங்களுக்கு ஆங்கிலம் தெரியும். ஆனால், அதை வெளிப்படுத்துவதில் தயக்கம், கூச்சம் உண்டா?
ஆம் எனில் வாருங்கள் ஒரு வகுப்பில் 3 பேர் மட்டுமே!
அறிவு குறைந்தோருக்கு நிபந்தனையின் அடிப்படையில் இலவச வகுப்பு நடத்தப்படும்.

**தொடர்பு: 071 611 6305** (3949)

### இலவச அழகுக்கலைப் பயிற்சி

590/= பதிவுக்கட்டணத்துடன் Facial, Gold Facial, Eye brow shape, Pedicure / Manicure, Bridal Make up, Hair Styles, Bleaching, Hair Cut, Hair Ironing, Nail Arty, French Manicure இன்னும் பல செய்முறை விளக்கத்துடன் இடம்பெறும்.

- பயிற்சியின் முடிவில் சர்வதேச சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியில் இணைய விரும்புவோர் அறிமுக நிகழ்வில் கலந்து பதிவுகளை மேற்கொள்ளவும்.

காலம் : 18.09.2013
நேரம் : 10 மணி
இடம் : 187/30, யூனியன் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (3950)

**தொடர்புகளுக்கு: 077 228 8243 / 021 588 8000**

(நிபந்தனைக்குட்பட்டது)
(கிளிநொச்சியிலும் புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.)

### கிருஷ்ணா அடைவு சேவை

**இல.370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.** பதிவு இல:- J/DS/BR/472
**இல.09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2012 ஆம் ஆண்டு (31.08.2012) இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2013 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 15 ஆம் திகதி (15.10.2013) இற்கு முன்பு மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டி புதுப்பித்துக் கொள்ளவும்.

புதுப்பிக்கத் தவறின் 15.10.2013 ஆம் திகதி விற்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

**இல.370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 021 490 0311** (சி-4711)
**இல.09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5046**

### புது வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளி விதானையார் வீதியில் தற்போது கட்டி முடிக்கப்பட்ட அழகிய புதிய வீடு சகல வசதிகளுடனும் விற்பனைக்குண்டு. (3953)

**(முழுவதும் ரைல்ஸ் பதிக்கப்பட்டது)**

**தொடர்பு:**
**077 327 3125**

## வடக்கு மாகாணசபைத் தேர்தல்- 2013

யாழ்.மாவட்டம்



தமிழ் மண் காப்போம்!
தாயகம் மீட்போம்!!

**எம்.கே.சிவாஜிலிங்கம்**

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

9

| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | | X |
|---|---|---|

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | |

(E-011)

## வடக்கு மாகாண சபைத் தேர்தல் - 2013

முல்லைத்தீவு மாவட்டம்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

**ஆண்டியையா – புவனேஸ்வரன்**

அகில இலங்கை சமாதான நீதிவான்

இலங்கை தமிழரசுக் கட்சி

X 1

(E/058)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு

## வடமாகாண சபைத் தேர்தல் 2013



X 4

எனது வெற்றி
உங்கள் வெற்றி..!
உங்கள் வெற்றி, உங்கள் சந்ததியின் வெற்றி
நம்பிக்கைக்குரிய தெரிவு

அண்ணன்

**சிராஸ்**

உங்கள் குரல்! எனது செயல்...!

www.voiceofseeras.com

(EC/4856)

## வடமாகாண சபைத் தேர்தல் 2013

கிளிநொச்சி மாவட்டம்



60 வருட கால
சுயநலமற்ற அரசியல்
அனுபவத்தை
மீண்டும் பெற்றிட....

**வீ.ஆனந்தசங்கரி**

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு (இலங்கைத் தமிழரசுக் கட்சி)

X 2

(CE/4853)

## மாகாணசபைத் தேர்தல் - 2013

யாழ் மாவட்டம்

X 15

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | |



**தர்மலிங்கம் சித்தார்த்தன்**
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

நேர்மையும் அனுபவமும் அறிவாற்றலுமுள்ள,
தமிழ் தேசியத்தில் தெளிவான பார்வையும் சிந்தனையுமுள்ள,
எளிதில் அணுகக்கூடிய வேட்பாளர்களை தெரிவு செய்வதன் மூலம்
தமிழினத்தையும் வடக்கு மாகாண சபையையும் பெருமைப்படுத்துவோம்!!!

- யாழ் மாவட்ட மக்கள்

(EC/4857)


# தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA)

# மாகாணசபைத் தேர்தல் 2013
யாழ்ப்பாண மாவட்டம்




"அபிவிருத்தி
சுதந்திரம்
ஜனநாயக உரிமை
என்பவற்றுக்காக
உழைக்கும்..."

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பாக போட்டியிடும் வேட்பாளர்கள்



**அந்தோனிப்பிள்ளை அகஸ்ரின்**
ஓய்வு பெற்ற ஆசிரியர்
வடகடல் நிறுவன கண்காணிப்பாளர்
3




**ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன்(ரங்கன்)**
பருத்தித்துறை
பிரதேச சபை உறுப்பினர்
5



**சின்னத்துரை தவராஜா**
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
முதன்மை வேட்பாளர்
7



**அலெக்ஸாண்டர் சூசைமுத்து(சார்ள்ஸ்)**
சாவகச்சேரி
நகரசபை உறுப்பினர்
8



**கந்தசாமி கமலேந்திரன்(கமல்)**
யாழ் மாவட்ட
பிரதம அமைப்பாளர்
10



**கோடீஸ்வரன் றுஷாங்கன்**
ஊடகவியலாளர்
ஊடக ஆய்வாளர்
12



**ஞானசக்தி சிறீதரன்**
முன்னாள் வடக்கு கிழக்கு
மாகாணசபை உறுப்பினர்
13



**நாகன் கணேசன்**
பனை, தென்னை வள
கூட்டுறவு சமாச தலைவர்
15




**பாலகிருஸ்ணன் சிவகுரு (ஜீவன்)**
வலி. மேற்கு
பிரதேச சபை உறுப்பினர்
17



**சுந்தரம் திவகலாலா**
முன்னாள் செயலாளர்
கல்வியமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம்
19

(EC/4859)

## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி


வடக்கு மாகாண சபைத் தேர்தல் - 2013
யாழ் மாவட்டம்
அங்கஜன் இராமநாதன்
MBA (International) B.Eng (Hons)
அன்பானவர்களே!
உரிமைகளை பெற்றுக்
கொள்வதற்கு நான்
தடையானவனல்ல.
சாத்தியமான வழிகளில்
உரிமைகளுக்காக முயற்சிப்போம்.
ஆனால் உரிமைகளை
பெறுவதற்க்கான கனவில்,
காத்திருப்பில் மீண்டும்,
மீண்டும் எமது வாழ்வை
தொலைத்துக் கொண்டிருக்கலாமா?
சிந்தியுங்கள் அபிவிருத்தி பாதையில்
எமது வாழ்வை வளப்படுத்துவதனூடே
உரிமைகளைச் சாத்தியமாக்குவதே
புத்திசாலித்தனமானதாகும்.
1
X 1
எங்களின் நேர்மை
உங்களின் நம்பிக்கை
முகப்புத்தகத்தில் தொடர...
www.facebook.com/angajan1
(EC/4851)

# அமெரிக்க ஜனாதிபதியை சந்திக்கிறார் மன்மோகன்

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவிற்கும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும் இடையில் சந்திப்பொன்று இடம் பெறவுள்ளது.

இச்சந்திப்பு எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அமெரிக்காவின் வெள் ளை மாளிகையில் இடம்பெறவுள்ளது.

இந்த சந்திப்பின்போது அணுசக்தி வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஒப்பந்தங்கள் கையெழுத்தாக வாய்ப்புள்ளதாக வெளியுறவுத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒபாமாவுடன் சந்திப்பு

ஐ.நா.பொதுச்சபைக்கூட்டம் இம்மாத இறுதியில் நியூயோர்க்கில் நடைபெற வுள்ளது. இத்தினத்தில் 28 ஆம் திகதி மன்மோகன்சிங் உரையாற்றவுள்ளார். இதன்போது ஒபாமாவை மன்மோகன் சிங் சந்திக்கவுள்ளார்.

புதிய ஒப்பந்தங்கள்

இந்த பேச்சுவார்த்தையின் போது இரு நாடுகளுக்கும் இடையே அணுசக்தி வர்த்தகம் மற்றும் பாதுகாப்புத்துறைகளில் சுமார் 200 மில்லியன் டொலர் (சுமார் ரூ.1.260 கோழி அளவிலான முக்கியத்துவம் வாய்ந்த சில புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே அமுலிலுள்ள சில ஒப்பந்தங்களும் புதுப்பிக்கப்படுகிறது. இந்திய பாதுகாப்புத்துறையை பலப்படுத்தும் விதமாக அமெரிக்காவில் இருந்து சிறிய ரக பீரங்கிகள் வாங்குவது குறித்த அம்சங்களும் இந்த பேச்சுவார்த்தையின் போது இடம் பெறும்.

நவாஸ் ஷெரீப்புடன் சந்திப்பு?

ஐ.நா.பொதுச்சபை கூட்டத்தில் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் 27 ஆம் திகதி உரையாற்றுகிறார். பிரதமரின் அமெரிக்க பயணத்தின்போது பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், காஷ்மீரில் பாகிஸ்தான் தற்போது நடத்தி வரும் அத்துமீறிய தாக்குதல்களால் இந்தச் சந்திப்பு கேள்விக்குறியாகி உள்ளது.

காஷ்மீர் பிரச்சினை

எனினும் இரு தலைவர்களுக்கு இடையேயான சந்திப்பு உறுதியாக நடைபெறும் என வெளியுறவுத்துறை வட்டாரங்கள் தெரிவித்து வருகின்றன. மேலும் இந்த பேச்சுவார்த்தையின் போது காஷ்மீரில் பாகிஸ்தான் சமீபத்தில் நடத்திய அத்துமீறிய தாக்குதல்கள் மற்றும் இரு நாடுகளுக்கு இடையேயான பொருளாதார ஒத்துழைப்பு குறித்த அம்சங்கள் இடம்பெறும் எனவும் தெரிகிறது. (அ-2)

# சக்தி வாய்ந்த வெடி பொருட்கள் 17 வருடங்களின் பின்னர் மீட்பு

கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த லொறியொன்றுக்குள்ளிருந்து 17 வருடங்களின் பின் மீண்டும் அதிசக்தி வாய்ந்த வெடிப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களால் மிகவும் சூட்சுமமான முறையில் பதுக்கி வைக்கப் பட்டிருந்த 100 கிலோ கிராம் நிறையுடைய டி. என். டி. ரக வெடிபொருட்களே தற்போது கைப்பற்றப்பட்டிருப்பதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது. இது தொடர்பில் தெரிய வருவதாவது,

தமிழீழ விடுதலைப்புலியினர் வெடி பொருட்களைக் கடத்தினார்களென்ற சந்தேகத்தின் பேரில் குறித்த லொறி 1996 ஆம் ஆண்டில் கொட்டாஞ்சேனைப் பொலிசாரால் கைப்பற்றப்பட்டது. அதன்போது அதில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 75.5 கிலோ கிராம் நிறைவுடைய டி. என். டி. வெடிபொருட்கள் அடங்கிய 6 பெட்டிகள் மீட்கப்பட்டிருந்தன.

அதனைத் தொடர்ந்து பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் இது குறித்து தொடர்ந்தும் விசாரணை செய்து வந்த நிலையில் குறித்த லொறி கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்திற்கு அருகிலேயே நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது.

17 வருடங்களின் பின் இவ் லொறியை வேறு இடத்திற்கு மாற்ற கடந்த 12ஆம் திகதி முயற்சித்த போது லொறிக்குள் மேலும் வெடி பொருட்கள் இருப்பது கண்டறியப்பட்டது.

இதன்படி பெற்றோல் தாங்கிக்குள் மிக சூட்சுமமான முறையில் மறைத்து வைக் கப்பட்டிருந்த 100 கிலோ கிராம் நிறையுடைய 8 பெட்டிகளில் அடைத்து வைக்கப்பட்ட டி. என். டி வெடிபொருட்கள் மீட்கப்பட்டதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்தது.

இது குறித்து நீதிமன்றிற்கு அறிவித்து வெடிபொருளை அழிக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (அ-2)

# வாரம் ஒரு தகவல்

## எமக்காகவே நாம் வாழ்கிறோம்

ஒரு முதியவர் தனக்கு எதிரே இருந்த இளைஞரை நோக்கி "நீ உனக்காக வாழக் கற்றுக்கொள்" என உபதேசித்தார்.

அவ் இளைஞன் அவரிடம் "இல்லை நான் பிறருக்காகவே வாழப் பிரியப்படுகிறேன்" என்றான்.

அதற்கு அப்பெரியவர் "ஒருவர் தனக்காக சேவை செய்து கொள்வது தான் உலக இயல்பு...இன்னொருவருக்கு சேவை செய்வது தான் நோக்கம் என்று யாரும் இருக்க முடியாது" என தெரிவித்தார்.

ஆனால் அவ் இளைஞனோ "என் இயல்பு அப்படி இல்லை என்று நினைக்கிறேன்... என்னால் அப்படி பிறருக்காக இயங்க முடியும் என தோன்றுகிறது!" என தெரிவித்துக் கொண்டான்.

அப்போது அப்பெரியவர் இளைஞனை நோக்கி "இதுவரையிலும் எந்த மனிதனுமே தனக்கென்று வாழாமல் இருந்தது கிடையாது... தனக்காக வாழ்வதில் இரண்டு வகை உண்டு... அதில் ஒன்று தன்னுடைய நலனுக்காக மற்றவர் நலனை அழிப்பது தவிர்க்க முடியாமல் போவது... இரண்டாவது தனக்காக வாழ்வதில் மற்றவர்களுக்கும் பல நல்ல பயன்கள் ஏற்படலாம். இந்த இரண்டாவது வகையில் தன்னுடைய நலன்களைப் பாதுகாத்து வளர்ச்சியடைவது தான் நல்லது..." என்று விளக்கமளித்தார்.

எனினும் இக்கருத்தை புரிந்து கொள்வது அவனுக்கு சற்று கடினமாகவே இருந்தது.

இவ்வாறு இவர்கள் உரையாடிக் கொண்டிருக்கும் போதே சிறிது தூரத்தில் இருந்த குளத்தில் குழந்தை ஒன்று தடுமாறி விழுவதை அவ் இளைஞன் அவதானித்தான். உடனே பதறியடித்து ஓடிய இளைஞன் அக்குழந்தையை காப்பாற்றினான். அதன்போது அவனது முகத்தில் நிம்மதி வெளிப்பட்டது.

அப்போது அந்த பெரியவர் "இப்போது ஏன் ஓடிப்போய் அந்தக் குழந்தையை காப்பாற்றினாய்?" என்று கேட்டார்.

அதற்கு இளைஞன் "நான் பிறருக்காக வாழ்கிறவன். என்னைவிட எனக்கு அந்தக் குழந்தை முக்கியம்" எனத் தெரிவித்தான்.

அதற்கு அப்பெரியவர் "அப்படி நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய். ஆனால் உண்மை அதுவல்ல... அந்தக் குழந்தை தண்ணீரில் வீழ்ந்ததும் உன் மனதில் ஒரு தவிப்பு... ஒரு துன்பம் அந்த துன்பத்தையும், தவிப்பையும் தவிர்க்கவே நீ குழந்தையை காப்பாற்றினாய்..." என கூறினார்.

அப்போதுதான் அவனுக்கு புரிந்தது தான் தனக்காகவே வாழ்ந்து கொண்டிருப்பது.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இராசி பலன்

15.09.2013
(ஆவணி 30, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
ஏகாதசி பின்னிரவு 12.59 மணிவரை
உத்தராடம் முன்னிரவு 11.58 மணிவரை
இராகுகாலம் 4.33-6.03 மணிவரை
சுபநேரம் 9.03-10.33 மணிவரை
ஐந்தாம் ஆவணி ஞாயிறு,
பரிவர்த்தன ஏகாதசி விரதம்

**மேடம்** இனிமையான நாள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், சொத்து சம்பந்தப்பட்ட வகையில் ஆதாயம் கிடைக்கலாம், ஆரோக்கியமான நாள்.

**இடபம்** ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும், சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும், இனத்தார் பகை மாறும், திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும்.

**மிதுனம்** வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, பிரயாண பயமுண்டு.

**கடகம்** ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், நண்பர்கள் சந்திப்பால் நன்மையுண்டு, வராத உறவினர் உங்கள் வீடுகளுக்கு திடீரென வரலாம், தூரதேச செய்திகள் மகிழ்ச்சி தரும்.

**சிங்கம்** போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும்.

**கன்னி** சேமிப்பை உயர்த்தும் எண்ணம் மேலோங்கும், பிள்ளைகள் வழியில் பெருமையான செய்திகள் வந்து சேரலாம், நீங்கள் திட்டமிட்ட காரியங்களில் சில திருப்பங்கள் ஏற்படலாம்.

**துலாம்** வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், நம்பி வந்தவர்களுக்கு உதவி செய்யும் எண்ணம் உருவாகும், பயணங்களால் பலனுண்டு, சுப செலவுகள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** உடன் பிறப்புக்கள் உதவி செய்ய முன் வருவர், பாராட்டும் புகழும் கூடும், காரிய அனுகூலமுண்டு, இனிய அனுபவங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**தனுசு** பம்பரமாக சுழன்று பணியாற்றுவீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், நீண்ட நாளைய கோரிக்கைகள் நிறைவேறலாம், சில விவாதங்கள் ஏற்படலாம், குடும்பக் கவலைகள் ஏற்படலாம்.

**மகரம்** வழிபாட்டால் வளர்ச்சிகாண வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணம் அனுகூலம் தரும், கொடுக்கல் வாங்கல்களில் ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும், தெய்வீக சிந்தனை மேலோங்கும்.

**கும்பம்** தொழிலில் சில மாற்றங்கள் செய்வது பற்றி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், இறை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சிறிய வேலை ஒன்றிற்காக பலமுறை அலைய நேரிடலாம்.

**மீனம்** குடும்ப மகிழ்ச்சி கூடும், நட்பு வட்டம் விரிவடையும், காரிய அனுகூலமுண்டு, தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயர்வடையும்.

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 50 | 40 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 - 140 | 110 | .20 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 80 |
| தக்காளி | 70 | 60 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 |
| கோவா | 60 | 80 | 80 |
| கரட் | 80 | 100 | 120 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 - 140 | 140 - 180 | 200 |
| பெரிய வெங்காயம் | 90 | 140 | 120 |
| பாகற்காய் | 70 | 60 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | 50 | 80 | 80 |
| பயற்றங்காய் | 140 | 80 | 100 |
| லீக்ஸ் | 90 | 120 | 120 |
| பீற்றூட் | 150 | 40 | 40 |
| கறிமிளகாய் | 60 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 60 | 120 | 100 |
| போஞ்சி | 110 | 100 | 140 |
| கீரை - 1 பிடி | 25 | 30 | 30 |
| தேசிக்காய் | 240 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 - 50 | 50 | 40-50 |
| இராசவள்ளி | 90 | 120 | 140 |

**வடமாகாண சபைத் தேர்தல் 2013**
**முல்லைத்தீவு மாவட்டம்**

**வல்லிபுரம் கமலேஸ்வரன்**

(தலைவர், இலங்கைத் தமிழரசுக் கட்சி முல்லை மாவட்டம்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)
உண்மைக்கு குரல் கொடுத்து
உரிமைகளை வென்றெடுப்போம்
தன்மானம் உள்ள தமிழனாய்
தலை நிமிர்ந்து நின்றிடுவோம்
அதற்காய்
உங்கள் தெரிவு.....



இலங்கைத் தமிழரசுக் கட்சி X 7


# அமைச்சர் பசிலின் கூற்று அருவருக்கத்தக்கது

## விக்ரமபாகு தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு மக்களை அச்சுறுத்துவதற்காகவே வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்திலிருந்து தான் விலகப்போவதாக அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்திருப்பதாக புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கைகளுக்குள் சென்றால் தற்போது வழங்கப்பட்டு வரும் நிதி உதவிகளை நிறுத்தப் போவதாக அமைச்சர் மறைமுகமாக எச்சரித்துள்ளார்.

வடக்கின் வசந்தம் தொடர்பான நிதியத்தை வைத்திருக்க வேண்டுமாயின் அரசாங்கத்திற்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று பசில் ராஜபக்ஷ வட பகுதி மக்களிடம் கூறியுள்ளார்.

மத்தியஸ்தர் ஒருவரிடம் வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தை ஒப்படைக்க போவதாக தெரிவித்துள்ளதன் பின்னணியில் வடக்கு மாகாண சபைத் தேர்தலே இருக்கின்றது.

அரசாங்கம் வழங்கும் நிதியுதவி தொடர்ந்து கிடைக்க வேண்டுமாயின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டும் என்று அச்சுறுத்தும் வகையில் தெரிவித்திருப்பது அருவருக்கத்தக்கது என்பதுடன் கண்டிக்கப்படவும் வேண்டியது என்று அவர் தெரிவித்துள்ளார். (அ-2)


**வடமாகாண சபைத் தேர்தல் யாழ். மாவட்டம்**



விவேகம், துணிவு, நேர்மை என்றும் உங்களுடன்
விவேகம், துணிவு, நேர்மை என்றும் உங்களுடன்
**பாலா**
**கணேசபிள்ளை பாலச்சந்திரன்**
(ஐக்கிய தேசியக்கட்சியின் செயற்குழு உறுப்பினர், காரைநகர் பிரதேசசபை உறுப்பினர், அகில இலங்கை சமாதான நீதவான்)
வெற்றிபெற வையுங்கள்
X 11
(E-036)



வடக்கு மாகாண சபைத் தேர்தல் - யாழ் மாவட்டம்

**தேசியம் சுழலியம் சுய நிர்ணயம்**

தமிழ்த் தேசிய அரசியலில் இன்று ஒரு சூழலியலாளனும் தேவை.

நம்பிக்கைக்குரிய தெரிவு

**பொ.ஐங்கரநேசன்**
M.Sc,PGDJMC



X 2

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - இலங்கைத் தமிழரசுக் கட்சி
(EC/5007)



**வடமாகாண சபைத் தேர்தல்-2013**

**யாழ். மாவட்டம்**
**இரத்தினலிங்கம் ஜெயசேகரன்**
(வர்த்தக சங்கத் தலைவரும் சமூக சேவையாளரும்)



தமிழன் என்ற தேசிய இனத்தின் சுய கௌரவம் கிடைக்க எனக்கு வாக்களியுங்கள்

**இலங்கை தமிழரசுக் கட்சி**
X 6
**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**
நண்பர்கள்



**வடமாகாண சபைத் தேர்தல் 2013**
**முல்லைத்தீவு மாவட்டம்**

**வீ.கனகசுந்தரசுவாமி**
(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



போரினால் சிதைக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தினை மீண்டும் கட்டி எழுப்பி எம்மை நாமே ஆட்சி செய்திட சிந்தித்து வாக்களிப்பீர்...

4

இலங்கை தமிழ் அரசுக் கட்சி X
(E-045)



எம்மண், எம்மக்கள், எம்முரிமை
உங்கள் தெரிவு
**க.வி.விக்னேஸ்வரன்**
(ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர்)
முதன்மை வேட்பாளர் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
X 10



# உரமானிய விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்வதில் சிரமம்

(கரணவாய்)

கரவெட்டி கிழக்கு கமக்கார அமைப்பிற்குட்பட்ட விவசாயிகள் உரமானியம் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்வதில் பல இன்னல்களை எதிர்நோக்கியுள்ளனர்.


தற்போது உரமானியம் பெற்றுக் கொள்வதாயின் விவசாயிகள் ஏக்கர் வரிப்பத்திரம் அல்லது ஏக்கர் வரிப்பத்திரம் செலுத்திய பற்றுச் சீட்டு என்பனவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.

இப் பற்றுச் சீட்டைப் பெறுவதற்கு கிராம சேவையாளர் கையொப்பம், கமநல சேவை அதிகாரியின் உறுதிப்படுத்தல், கமக்கார அமைப்பினரின் கையொப்பம் போன்றவற்றை எடுப்பது அவசியமாகும்.

ஆயினும்,கரவெட்டி கிழக்கு கமக்கார அமைப்பின் செயற்பாடுகள் சீரின்மையாலும் புதிய நடைமுறைகளாலும் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கரவெட்டி பகுதியில் உரமானிய விண்ணப்பங்களை 12 விவசாயிகள் மட்டுமே பூர்த்தி செய்துள்ளரென தெரியவருகின்றது. (அ-9-60)




# இனம்தெரியாதோர் நெற்கபே நிலையத்தை எரியூட்டினர்



(யாழ்ப்பாணம்)

நெற்கபே நிலையமொன்று இனந்தெரியாதோரால் பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நிகழ்ந்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அருகாமையிலுள்ள நெற்கபே நிலையமே இவ்வாறு எரியூட்டப்பட்டதாகும்.

இதில் தனக்கு 50 இலட்சம் ரூபாய் வரையில் நஷ்டம் ஏற்பட்டுள்ளதென கடை உரிமையாளர் தெரிவித்தார்.

இராமநாதன் வீதியை சேர்ந்த நபரொருவருடைய நெற்கபே நிலையமே இவ்வாறு தீக்கிரையானது.

ஒரு டிஜிற்றல் அச்சு பிரதியெடுக்கும் இயந்திரம் உட்பட 8 பிரதியெடுக்கும் (போட்டோ கொப்பி) இயந்திரங்களும் 9 கணனிகளும் ஒரு தொலைக்காட்சி பெட்டி, ஒரு குளிர் இயக்க இயந்திரம், தொலைநகல் இயந்திரம் மற்றும் தொலைபேசிகள் என்பன எரிந்து நாசமாகியுள்ளன என உரிமையாளர் தெரிவித்தார்.

கடையின் மேற்கு பக்கத்தில் ஏசி இயந்திரத்தின் குழாய்கள் உள்ளே வரும் பகுதியூடாகவே பெற்றோல் ஊற்றப்பட்டு எரிக்கப்பட்டுள்ளது.

இதனால் கடை முழுவதிலுமுள்ள மின் கடத்திகள் எரிவுற்று மின்னொழுக்கும் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணத்தாலேயே கடை முழுவதும் தீ பரவி எரிந்துள்ளது.

சம்பவம் இரவு நேரம் நடந்தமையினால் கடை எரிந்தமை எவருக்கும் தெரியவில்லை. இதன் காரணத்தினால் தீச் சுவாலை பரவி அனைத்தும் எரிந்துள்ளன.

ஒரு சில இயந்திரங்கள் மீள் புனரமைப்புடன் பாவிக்கும் நிலையில் காணப்படுகின்ற போதிலும் ஏனையவை அனைத்தும் எரிந்து கருகியுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் கடை உரியாளரினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நிலையம் எரியூட்டப்பட்ட காரணம் என்ன என்பது தொடர்பில், தாம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் எரியூட்டியவர்கள் யார் என தேடுதல் நடத்தி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-4)

# அறிவக திறப்புவிழா

(சாவகச்சேரி)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் தொலைத் தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சினால் வழங்கப்பட்ட சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்தி சங்க (நெநசல) அறிவகம் திறப்பு விழா நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கையிலுள்ள சங்க மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இவ் அறிவகம் திறந்து வைக்கப்படவுள்ளது.

சங்கத்தலைவி திருமதி ம.கீர்த்திநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் தொலைத் தொடர்பாடல் மற்றும் தகவல் தொழிநுட்பவியல் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நிலையத்தை திறந்து வைக்கவுள்ளார். சிறப்பு விருந்தினராக இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலைய பிரதம நிறைவேற்று அதிகாரி தெஷான் தேவப்புர கலந்து சிறப்பிக்கவுள்ளனர் . (அ-9-29)

# இராணுவத்தினர் வெளியேற்றம்

(நவாலி)

நவாலி சிந்தாமணி பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையிலிருந்த இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் வெளியேறியுள்ளனர்.

இதனையடுத்து இராணுவம் இருந்த வீடு அதன் உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

யுத்த காலத்தில் அமைக்கப்பட்ட மேற்படி இராணுவ முகாம் பல வருடங்களாக அவ்விடத்திலே இருந்து வந்தது.

தற்போதைய சமாதான சூழ்நிலையில் அகற்றப்பட்டுள்ளதுடன் வீட்டு உரிமையாளரிடம் வீடு ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-9-26)

# யாழ்ப்பாணத்தில் சமிக்ஞை விளக்குகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு முதலாவது சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

குறித்த சமிக்ஞை விளக்குகள் நேற்று முன்தினம் மாலை பொருத்தப்பட்டன.

யாழ்ப்பாணம்-காங்கேசன்துறை வீதியையும் ஆஸ்பத்திரி வீதியையும் இணைக்கும் சத்திரச்சந்திப் பகுதியிலேயே இந்த முதலாவது வீதிச் சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்டன.

கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்களால்ள யாழ். நகரின் முக்கிய சந்திகளில் பயணிக்கும் வாகனங்களில் எண்ணிக்கைகள் கணக்கெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து வீதிச் சமிக்ஞை விளக்குகள் இப்பகுதியில் பொருத்தப்பட்டுள்ளன.

யாழ்.நகரத்திற்குள் இருந்தும் ஏ-9 வீதிக்கு செல்லும் வாகனங்களும் வெளியிடங்களிலிருந்து யாழ்.நகரத்திற்குள் நுழையும் வாகனங்களும் சத்திரச் சந்தியினூடாகவே பயணிப்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)



மக்கள் வங்கியின் யாழ்.பிரதான வீதிக்கிளை நேற்று முற்பகல் திறந்து வைக்கப்பட்டது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மக்கள் வங்கியின் தலைவர் காமினி செதாரசெனரத் நாடாவெட்டி திறந்து வைப்பதையும் யாழ்.பிராந்திய முகாமையாளர் எஸ்.சுசீந்திரன் மங்கல விளக்கேற்றுவதையும் வாடிக்கையாளர்களிடமிருந்து வைப்புப் பணத்தை மக்கள் வங்கியின் தலைவர் பெற்றுக் கொண்டு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.ஆர். கரன்)

# நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை எதிர்பார்க்க முடியாது

## எரான் விக்ரமரட்ன தெரிவிப்பு

**வடக்கில் தேர்தல் நீதியாகவும் சுதந்திரமாகவும் நடைபெறும் என்று எந்த வகையிலும் நம்பிக்கை வைக்க முடியாது. தற்போதைய நிலையிலே வடக்கில் ஆளும் கட்சி, அரச வளங்களைப் பயன்படுத்தி வருவதாகவும் அரச அதிகாரிகளைத் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி வருவதாகவும் அரசியல் கட்சிகள் மட்டுமன்றி சுயாதீன அமைப்புகளும் குற்றம் சாட்டியுள் ளன. இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ன தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் நடை பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையி லேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

இந்தத் தேர்தல் ஊடாக அரசாங்கத்தை மாற்ற முடியாது என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமாகும்.

ஆனால், இந்தத் தேர்தல் ஊடாக மக்க ளுக்கு சிறந்த மற்றும் வலுவான செய்தி ஒன்றை விடுக்க முடியும்.

எனவே, ஐக்கிய தேசிய கட்சியினரும் சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களும் அரசாங்கத் துக்கு இந்த தெளிவான செய்தியை விடுக்க முன்வரவேண்டும்.

இதேவேளை, வடக்கில் அரசாங்கம் அரச வளங்களைப் பயன்படுத்தி தேர்தல் பிரசார வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வரு கின்றமை தெளிவாகின்றது. இந்தக் குற்றச் சாட்டை அரசியல் கட்சிகள் மட்டுமன்றி சுயா தீன தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளும் முன்வைத்துள்ளன.

எனவே, வடக்குத் தேர்தலானது நீதியாக வும் சுதந்திரமாகவும் நடைபெறும் என்று எந்த வகையிலும் நம்பிக்கை வைக்க முடியாது.

தற்போதைய நிலைமையிலேயே இந்த விடயத்தை உறுதியாக கூற முடியும். அரச அதிகாரிகளை தேர்தல் நடவடிக்கைகளுக்கு ஆளும்கட்சி பயன்படுத்தி வருகின்றது.

இதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. ஆனால், ஆளும் கட்சி இதனையே தொடர் ந்து செய்து வருகின்றது. அந்த வகையில் வடக்கில் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை எதிர்பார்க்க முடியாது என்பதைத் தற்போதே கூறுகின்றோம்.

இது இவ்வாறு இருக்க நாட்டு மக்கள் இன்று வாழ முடியாது திண்டாடி வருகின்ற னர். தொழில்வாய்ப்புக்கள் இருப்பதாக கூறப்பட்டாலும் மக்களின் வருமானம் அதிக ரிக்கப்படவில்லை.

சில வருடங்களுக்கு முன்னர் ஒரு குடும் பம் ஒன்றின் மாதாந்த செலவாக 19 ஆயிரம் ரூபா எனக் கூறப்பட்டது.

ஆனால், இன்று ஒரு குடும்பம் ஒன்றின் மாதாந்த செலவானது 44 ஆயிரம் ரூபாவாக உயர்வடைந்துள்ளது. அந்த வகையில் மக்க ளின் தொழிலாளர்களின் வருமானம் அதிக ரிக்கவில்லை. கடந்த சில வருடங்களாகவே அரச ஊழியர்களின் சம்பளம் உரியமுறை யில் அதிகரிக்கப்படவில்லை. வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு மட்டும் 6 ஆயிரத்து 500 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

எனவே, வாழ்க்கைச் செலவை தாங்க முடி யாது திண்டாடுகின்ற, வாழ முடியாது அங்க லாய்க்கின்ற மக்கள் இந்தத் தேர்தலின் ஊடாக அரசாங்கத்துக்கு பலமான செய்தியை விடுக்க வேண்டும் என்று கோருகின்றோம். (அ-2)

## சர்வதேச கண்காணிப்பாளர்கள் இலங்கை வந்தடைந்தனர்

வடக்கு ,மத்திய மற்றும் வடமேல் மாகாண சபை தேர்தல் கண்காணிப்பு பணிகளுக்காக சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் இலங்கை வந்தடைந்துள்ளரென பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இம்முறை இடம்பெறவுள்ள மாகாண சபை தேர்தல் பணிகளில் சர்வதேச கண்காணிப் பாளர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும் என பல்வேறு தரப்பினராலும் கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன. இதன்படி உள்ளூர் கண்கா ணிப்பு குழுக் கள், தேர்தல் செயலகம் மற்றும் கட்சி பிரதி நிதிகளுக்கிடையிலான பேச்சுவார்த் தையைத் தொடர்ந்து சர்வதேச கண்காணிப் பாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை மத்திய மற்றும் வடமேல் மாகாண மக்களுக்கு தேர்தல் தொடர்பில் அதிக ஈடுபாடு இல்லை என தேர்தல் கண்கா ணிப்பாளர் மத்திய சபை தெரிவித்துள்ளது.

வடமாகாண மக்கள் மத்தியில் தேர்தல் தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு உள்ளதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் மேற் கொண்ட ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது. இம் மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தல் எதிர் வரும் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (அ-2)

## கரந்தன் வீதியை புனரமைக்குக

பலாலி வீதியிலிருந்து கரந்தனுக்குச் செல் லும் வீதி போக்குவரத்தை மேற்கொள்ள முடியாதளவுக்கு சேதமடைந்துள்ளதாக மக் கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சேதமடைந்த நிலையில் உள்ள இவ்வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படவில்லை.

குன்றும் குழியுமாக உள்ள இவ் வீதியால் அன்றாடம் பாடசாலை மாணவர்கள், விவ சாயிகள், வியாபாரிகள், தொழிலாளர்கள் என நூற்றுக்கணக்கானோர் பல சிரமங்களின் மத்தியில் பயணித்து வருகின்றனர்.

அத்தோடு இவ்வீதியை அண்மித்த பகுதி களில் தொழிற்சாலைகளும் உள்ளமையால் தொழிற்சாலை ஊழியர்களும் வாடிக்கை யாளர்களும் அதிகமாக இவ் வீதியை பயன் படுத்த வேண்டிய அவசியமும் உள்ளது.

எனவே, சீரற்றிருக்கும் இவ் வீதியை செப் பனிட்டு தருமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-78)





# சிறுவர் அரங்கம்

577

## நேர்மை!



கர்ணன் என்பவன் நீதி தவறாது பஞ்சாயத்து தீர்ப்பு அளிப்பவன். அவன் கிராமத்தில் வசித்து வந்த சோமன் என்கிற ஒரு பணக்காரன் இருந்தார். அவர் மிகவும் பொல்லாதவர், பணத்தாசைப் பிடித்தவர். தன்னிடம் வேலைசெய்பவர்களுக்கு சரியான கூலி கொடுக்க மாட்டார். ஒரு முறை சோமன் தன் தோட்டத்தில் விளைந்த தேங்காய்களை சந்தையில் விற்றுவிட்டு, கிடைத்த பத்தாயிரம் ரூபாயுடன் தன்னுடைய மாட்டு வண்டியில் காட்டுவழியாக வீட்டுக்கு வரும் போது தனது பணப்பையைத் தொலைத்து விட்டார்.

வீட்டுக்கு வந்ததும்வண்டியில் பணப்பையை தேடிப்பார்த்து கிடைக்காமல் புலம்பித்தள்ளினார். மாட்டு வண்டி ஓட்டிவந்தவர் முதல் அனைவரையும் கேட்டுபார்த்து கிடைக்காமல் என்ன செய்வது என்று தெரியாமால் விழித்தார். அப்போ அவரது மனைவியார். "உங்க பணப்பையைக் கண்டுபிடித்து கொடுப்பவர்களுக்குத் தகுந்த சன்மானம் கொடுக்கிறேன் என்று சொல்லுங்க, கண்டிப்பாக யாராவது கொண்டு வந்து கொடுப்பாங்க என்றார்.

ஆகா! இது நல்ல திட்டமா இருக்கிறதே என்று நினைத்து அடுத்த நாளே ஊர்முழுவதும் தண்டாரோபோட்டு சொல்லிவிட்டார். ஊர்மக்களும் பணப்பை கிடைத்தால் கொடுத்து சன்மானம் வாங்கலாம் என்று நினைத்தார்கள். அப்படி தேடிப்பார்த்தும் யாருக்கும் பணப்பை கிடைக்கவில்லை.

இந்தச் சம்பவம் நடந்து ஒரு வாரத்திற்கு பின்பு அருகில் இருந்த ஊரிலிருந்து அந்த ஊருக்கு ஒரு வழிப்போக்கர் வந்தார். அவர் பெயர் பூபாலன். மிகவும் நல்ல குணமுடையவர். ஏழையாக இருந்தாலும் கவுரமாக வாழ பிரியப்படுபவர். தன்னால் முடிந்தவரை அடுத்தவர்களுக்கு உதவுபவர். அவர் விவசாயம் செய்த நிலத்தில் நீர் கிடைக்காததால் விவசாயம் சரியாக செய்ய முடியவில்லை. வேறு தொழில் செய்யவோ தன்னிடம் பணமும் அனுபவமும் இல்லை என்பதால் பக்சத்து ஊருக்கு சென்று ஏதாவது வேலை செய்து, சம்பாதித்து பின்னர் தொழில் தொடங்க நினைத்து வந்தார். போகிற வழியில் காட்டுப்பாதையில் இருந்த அம்மன் கோயிலுக்கு போய் வேண்டிக்கொண்டார்.

அப்படி காட்டு வழியில் போகும் போது அங்கே ஒரு புறா அடிபட்டுக்



கீழே கிடந்தது. அதைப் பார்த்து இரக்கப் பட்ட பூபாலன் அந்தப் புறாவைத்தூக்கிக் கொண்டு அருகில் இருந்த குளத்திற்கு கொண்டு சென்று தண்ணீரை எடுத்து அந்தப் புறாவின் வாயில் ஊற்றினார். பின்னர் அந்த புறாவை அருகில் இருந்த மரக்கிளையில் வைத்து விட்டு வந்தார்.

அவர் அப்படி வரும் போது பாதையின் ஓரத்தில் காலில் ஏதோ மாட்டியதைக் கண்டார். அது ஒரு பை. அதில் நிறையப் பணமும் இருந்தது. அதை எடுத்தவுடன் பூபாலனுக்கு யாரோ பாவம், தன் பணப்பையை விட்டுவிட்டு போயிட்டாங்க, அப்படி தொலைத்தவர் மனம் எத்தனை வேதைனைப்படுமோ, எனவே விரைவில் அவரை கண்டுபிடித்து கொடுத்துவிடவேண்டும் என்று ஊருக்குவிரைந்தார்.

அப்போ ஊருக்குள் சென்றபோது அங்கே இருந்த கடையில் விசாரித்த போது கடைக்காரர் சோமனைச் பற்றிச் சொல்லி, அவர் தான் தொலைத்தவர், நீங்கள் இதைக் கொடுத்தால், கண்டிப்பாக சன்மானம் கொடுப்பார் என்றார். உடனே பூபாலனும், சோமன் வீட்டை தேடிப்பிடித்து சென்று பணப்பை கிடைத்த விபரத்தை சொன்னார், சோமனுக்கு சந்தோசம் தாங்க முடியவில்லை.

உடனே அந்த பணப்பையை வாங்கிக் கொண்டார். அதேநேரம் அவரது கெட்ட எண்ணமும் வெளிப்படத் தொடங்கியது. பணப்பை கிடைத்துவிட்டது. பணமும் சரியாக இருக்குது. இப்போ ஏன் இவனுக்கு சன்மானம் கொடுக்கவேண்டும், சன்மானம் கொடுக்காமல் தப்பிக்க என்ன செய்யலாம் என்று யோசித்தார் சோமன். கெட்டமனம் கொண்ட சோமன், பூபாலனைப் பாாத்து "நீ என்னை ஏமாற்றப்பார்க்கிறாய், நான் என்னுடைய பையில் வைர மோதிரம் ஒன்றையும் வைத்திருந்தேன், அது காணவில்லை, மரியாதையாக கொடுத்து விடு, உன்னை சும்மா விடமாட்டேன்" என்று கத்தினான்.

பூபாலனுக்கு ஒன்றுமே புரியவில்லை, ஒருவேளை இவர் சொன்னது போல் வைரமோதிரம்இருந்து தொலைந்து போயிருக்குமோ, நாம் தான் எடுக்கவில்லையே, இவரிடம் சன்மானம் வாங்குவதை விட பிரச்சினையில் இருந்து தப்பிக்லாம் என்று யோசித்தார்.

சோமனோ விடாமல் கத்தி ஆர்ப்பாட்டம் செய்தார், பூபாலன் பணப்பை கொண்டுவந்த செய்தியை ஊராருக்கு சொன்ன கடைக்காரர், கஞ்சப் பயல் சோமன் அப்படி என்னதான் பரிசு கொடுக்கப் போகிறான் என்று பார்ப்போம் என்று அனைவரையும் அழைத்துவந்தார். வந்த இடத்தில் பூபாலன் குற்றவாளி போல நின்றதைக் கண்ட ஊரார் சோமனை சும்மா விடக்கூடாது, இந்தப்பிரச்சினையோ கர்ணனிடம் தான் கொண்டு



சென்று தீர்ப்புக்கேட்கவேண்டும் என்று சொன்னார்கள்.

சிறிது நேரத்தில் சோமன், பூபாலன், ஊர்மக்கள் அனைவரும் கர்ணன் முன்னிலையில் போய் நின்றார்கள். சோமன் தான் பணப்பையும், அதில் இருந்த வைர மோதிரம் தொலைத்த கதையையும், பூபாலன் தான் பணப்பை கண்டு பிடித்த கதையையும் சொன்னார்கள்.

ஏற்கனவே சோமன் அறிவித்த தண்டோரா பற்றி கர்ணனுக்கு தெரியும், அப்போ தண்டோரா போடும்போது வைரமோதிரம் பற்றி ஒன்றும் சொல்லாததும் தெரிந்தது தான். ஆகமொத்தம் சோமன் ஏமாற்றுகிறான் என்பதை புரிந்துக் கொண்ட கர்ணன், சோமனுக்கு சரியான தண்டனை கொடுக்க நினைத்து இவ்வாறாக தீர்ப்பு கூறினார்.

"சோமன் தெலைத்தபையில் பணமும், வைர மேதிரமும் இருந்தது என்று அவரே சொல்லியிருக்கிறார். இப்போ பூபாலன் கொண்டுவந்த பையில் பணம்மட்டுமே உள்ளது. ஆக இது சோமனின் பையே இல்லை, வேற யாரோ தொலைத்த பை.


அப்படி தொலைத்தவர் இதுவரை யாரும் புகார்கொடுக்க வில்லை, அவ்வாறு யாரும் புகார் கொடுக்காதவரை நம்ம ஊர் வழக்குப்படி கிடைத்த பணத்தில், பத்துப்பங்கு அம்மன் கோயில் செலவுக்கு கொடுத்துவிட்டு, மீதியை எடுத்தவரே வைத்துக்கொள்ளலாம். ஆக

**பஞ்சதந்திரக் கதைகள்**

பூபாலன் அந்த பணத்தை தன் சொந்த உபயோகத்துக்கு வைத்துக் கொள்ளலாம், சோமனின் பணம் மற்றும் வைரமோதிரம் கொண்ட பையை கண்டுபிடித்தவுடன் சோமனே சன்மானம் கொடுப்பார், பஞ்சாயத்தை கலைக்கலாம்.

கர்ணன் பஞ்சாயத்து தீர்ப்பு சொன்னதும் சோமனுக்கு இதயமே நின்று போனது போல் ஆகிவிட்டது. பூபாலன் கிடைத்த பணத்தில் பத்து சதவீதம் அம்மன் கோயிலுக்கு கொடுத்துவிட்டு, மீதியை தன் சொந்த ஊருக்கு கொண்டு சென்று தொழில் செய்து நலமாக வாழ்ந்து வந்தார்.

# தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் சித்திரத் தேரினிலே பவனி வருகிறாள்



வரலாற்றுப் பெருமையும் வழிபாட்டுச் சிறப்பும் கொண்டது தெல்லிப்பழைதுர்க்கைஅம்மன்கோவில். துர்க்கை அம்மன் வரலாறு மிகவும் பூர்வீகமானது. கோயில் பற்றிய குறிப்புக்கள் தண்டிகை கனகராஜன் பள்ளு, கதிரமலைப்பள்ளு என்பவற்றில் காணலாம்.

துர்க்காதேவி திருப்பதிகம் ஒன்று 1923 ஆம் ஆண்டில் வெளிவந்தது. இப்பாடல்களில் துர்க்கை அம்மன் கோயில் வரலாறு இடம் பெற்றுள்ளது. சரித்திரப் பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம், கீரிமலையென்று புராதன திருத்தலங்களுடன் தொடர்பு கொண்டது.

கிழக்கு நோக்கிய சந்நிதியில் சங்கு, சக்கரம் ஏந்திய திருக்கரங்களோடு துர்க்கை அம்பாள் அடியார்களுக்கு திருக்காட்சி தருகின்றாள்.

துர்க்கை அம்மன் கோயில் 50 ஆண்டுகளுக்கு முன்னர் இலுபம் சோலைகளால் காணப்பட்டது. இக் கோயில் வழிபாடு செய்யவரும் அடியார் பெருந் தெருவில் இருந்து பனங்கூடல் ஊடாக ஒற்றையடிப் பாதையில் சென்று வழிபட்டார்கள் என்று முன்னோர்கள் பலர் கூற யான் அறிந்தது உண்டு.

துர்க்கை அம்மன் கோவில் துரதிர்ஷ்டவசமாக 140 ஆண்டுகள் திருப்பணிகளோ, புனருத்தாரணமோ இல்லாமல் மூடிக்கிடந்தது.

காசியிலே 10 ஆண்டுகள் தவம் செய்து துர்க்கா யந்திரத்தையும் திருமுகக் கெண்டியையும் ஸ்தாபித்தவர்.

இக்கோயில் ஸ்தாபகர் தவஞானி கதிர்காமர் அவர்களே. இக்கோயில் இன்றைய எழுச்சிப் பெருநிலையடைய வித்திட்ட பரோபகாரி தர்மசீலர் கதிரேசு நாகநாதர் அவர்கள். இவர்களின் பெருந்தன்மையால் இன்று உலகப் பொதுக் கோயிலாக துர்க்கை அம்மன் கோவில் மிளிர்கின்றது.

கடந்த 19 ஆம் நூற்றாண்டில் சைவத்துக்கும் தமிழுக்கும் பெருந் தொண்டாற்றிய நாவலர் பெருமானுக்குப் பின் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் உதயமானார். சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் சமயப் பணிகளுடன் நின்றுவிடாது சமுதாயப் பணிகளையும் சிறப்புற ஆற்றினார்.

இராஜகோபுரத்தையும் சித்திரத் தேரையும் துர்க்காபுஷ்கரணி தீர்த்தத் தடாகத்தையும் நிர்மாணித்து பெரும் கோயிலாக- தேவஸ்தானமாக பரிணாம வளர்ச்சி பெற வித்திட்டவர் சிவத்தமிழ்ச் செல்வி அம்மா.

ஏழைப்பெண் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டு சைவத் தமிழ் பண்பாடும் சைவ கலாசாரமும் மிகுந்த துர்க்காபுரமான மகளிர் இல்லத்தை 03.02.1981 ஆம் ஆண்டு நிறுவினார். தமது வாழ்நாளில் 26 ஆண்டுகள் நிர்வகித்து ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் கண்டவர் சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார்.

இவ் இல்லம் இன்று 32 ஆண்டுகளைக் கொண்டுள்ளது. இல்லப் பிள்ளைகள் துர்க்கை அம்மன் கோவில் சரியைத் தொண்டுகளில் தம்மை ஈடுபடுத்தி வருவது மகிழ்ச்சி தருவதாகும். மேலும் கோயில் சரியைத் தொண்டுகளுக்கு சமயோசித தொண்டர்களும் தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கமும் துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபையும் சரியைத் தொண்டுகளில் தம்மைப் பரிபூரணமாக ஈடுபடுத்தி வருதல் மகிழ்ச்சிக்குரியதாகும்.

இன்று நாம் காணும் துர்க்கை அம்மன் சித்திரத்தேர் முக பத்திர வேலைப்பாடுகளுடன் அமைந்த திராவிட மரபுத் தேர் ஆகும். இச் சித்திரத்தேரைஉருவாக்கியபெருமை சிற்பச் சக்கரவர்த்தி கலாகேசரி ஆ.தம்பித்துரை அவர்களையே சாரும். கவின்கலைக்கு ஒரு கலாகேசரி அவர்கள் மரத்துக்கு உயிர் கொடுத்த பிரமாவாகும்.

தேர்விழா ஒரு சமுதாய பெருவிழாவாகும். சமூக ஒருமைப்பாட்டை தேர்விழா உணர்த்தி நிற்கிறது. இன்று தேர்விழாவைத் தரிசிக்க வரும் பல்லாயிரக்கணக்கான அடியார் கூட்டத்துக்கு கொற்றவைத் தெய்வமான துர்க்கை அம்பாள் அருள்மழை பொழியப் பிரார்த்திப்போமாக.

*கா.சிவபாலன்.*

## நல்ல தீர்வினைத் தந்தருள தேரேறி வருகிறாள் துர்க்கா தேவி

தெல்லியூர் பதிமேவும் துர்க்கா தேவியே!
அருள் மழை பொழியும் அன்னை துர்க்கா தேவியே!
மங்கையர்க்கு நல்மண வாழ்வு அளித்திடும் துர்க்கா தேவியே!
மனையிழந்து, வாழ்விழந்து, வாழ வழியின்றித் தவிக்கும்–எம் மக்களுக்கு
நல்ல தீர்வினைத் தந்தருள தேரேறி வருகிறாள் துர்க்கா தேவி

வி.இராசநாயகம், நயினை

## துர்க்கா தேவி தேரினிலே



தட்சன் மகளாய் பிறப்பெடுத்து
தன்னலமற்ற தாயன்பில் உயிர் உடலாகி
தக்க சமயத்தில் காத்தருளும்
தேவி துர்க்கா தேரினிலே
முப்புரம் எரித்த சிவனார்க்கு இனியவளாய்
மும்மலம் நீக்கி அருள்பவளாய்
முக்கோண ஸ்ரீசக்கரம் அமர்ந்தவளாய்
முகாம்பிகை தேவி துர்க்கா தேரினிலே

பேரின்பநாதன் பரமநாதன்

## தெல்லிநகரில் தேரேறு

தெல்லிநகர் உறைபவளே தேசநலன் காத்திட தேரேறு
வல்லமையாய் இருப்பவளே வையகத்தை வாழ்விக்க தேரேறு
உள்ளமதை பிடித்த துயரகற்ற உகந்ததோர் தீர்வளிக்க தேரேறு
நல்லவைகள் எங்கும் நிகழ நாயகியே நலம்காட்ட தேரேறு

மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்

## ஆதி பரமேஸ்வரியே அண்டமெல்லாம் காத்தருள தேரேறி வருக

பொங்கு தெல்லி நகர் வாழ்துர்க்கையம்மா தேரேறி வருக
சோதி வடிவானவளே துன்பமெல்லாம் தீர்த்திட தேரேறி வருக
திருவளம் சுரக்கும் செங்கமலாசினி தேரேறி வருக
ஆதி பரமேஸ்வரியே அண்டமெல்லாம் காத்தருள தேரேறி வருக
தமிழருக்கு விடிவு தந்திடவே துர்க்கையம்மா தேரேறி வருக

தொல்புரத்தூர் க.லோகேஸ்வரன்

## தேரில் திரிபுரசுந்தரி

தேரேறி வருகிறாள், தேவி வடிவாம்பிகை,
சாதாரி பண்பாட, சேதாரம் நீக்குவாள்,
சமாதானம் பேணும் உபகாரி,
சந்தோஷ ரூபிணி, சௌபாக்கிய பரோபகாரி,



ஏதாயினும் எமக்கு ஓர்வழி காட்டவே
இன்று நீ தேரில் வருகிறாய்,
இச்சகம் ஒருபோதும் தோற்கவே கூடாது
இன்று யாவும் மறப்போம்,

தீராத நோய், வறுமை, தீர்த்திட வேண்டியே
தேர்வடம் தொட வருகின்றோம்,
தெல்லிநகர் வாரியே, தெவிட்டாத சுரபியே,
தேசநல சுபகாரி துர்க்கா!

கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்.

# இனவாதிகள் தமக்குள் மோதிக் கொள்வதில்லை

## அமைச்சர் வாசு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தெற்கிலுள்ள இனவாதிகளும் வடக்கிலுள்ள இனவாதிகளும் தமக்குள் பேச்சுவார்த்தை நடத்துகின்றனரோ தெரியவில்லை என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் பொதுச் செயலாளரும் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் ஏற்பாட்டில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளரான தமிழழகனுக்கு ஆதரவு திரட்டும் நோக்குடன் யாழ்.நகரிலுள்ள ஹோசிமின் விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் நடத்தப்பட்ட பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டை பொறுத்தவரை கடந்த காலத்திலும் சரி தற்போதும் சரி இனவாதிகளின் கருத்துக்களும் தூண்டுதல்களும் அதிகரித்தே காணப்படுகின்றன.

குறிப்பாக தெற்கிலுள்ள இனவாதிகளான ஜே.வி.பியினரும் வடக்கிலிருந்த விடுதலைப் புலிகளும் தமக்குள் மோதிக்கொண்டதில்லை.

இதை வைத்துப் பார்க்கும் போது இனவாதிகள் தமக்குள் பேச்சுவார்த்தை நடத்துகின்றனரோ என்ற சந்தேகம் ஏற்படுகின்றது.

மேலும் தெற்கிலும் வடக்கிலுமுள்ள இனவாதிகளுக்கிடையில் தற்பொழுதும் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றதோ என்பது தெரியவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர்களான திஸ்ஸ விதாரண, டியூ.குணசேகர ஆகியோரும் வேட்பாளர் தமிழழகனும் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் ஒருங்கிணைப்புச் செயலாளர் கலாநிதி சி.மோகன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ-6)

# வட பகுதியை தனிநாடாக்க கூட்டமைப்பினர் முயற்சி

## *அமைச்சர் விதாரண குற்றச்சாட்டு*

வடக்குமாகாணத்தைதனிநாடாகஉருவாக்க தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எடுத்து வரும் முயற்சிகள் துன்பியல் நிகழ்வாகும் என அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் ஏற்பாட்டில் ஹோசிமின் விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்துடன் இணைந்து பேச்சுவார்த்தைகள் மூலம் சமாதானத்தை கட்டியெழுப்புவதை விடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பிரிவினைவாதத்தினை தூண்ட முயற்சிக்கின்றனர்.

வடபகுதியினரை தனிநாடாக உருவாக்க இவர்களால் எடுக்கப்பட்டு வரும் முயற்சிகள் மிகவும் துன்பியல் நிகழ்வாகும்.

வெளிநாட்டிலுள்ளவர்களின் கருத்துக்களுக்கு அமைவாக தமிழ் மக்களின் நிலைப்பாடு இதுதான் என முடிபுகளை அரசு எடுக்கின்றனரேயன்றி இங்குள்ள தமிழர்களைப் பற்றி நினைக்கின்றனராகவில்லை. அடக்குமுறைக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிரானவர்கள் நாம்.

இனம், மதம், சாதி காரணமாக ஒடுக்கப்பட்டவர்களுக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றோம். தமிழ் மக்களின் நலனுக்காக நாம் தொடர்ந்து போராடி வருகின்றோம். அத்தோடு வடக்கு மாகாண சபைத் தேர்தல் இடம்பெறவும் நாம்தான் காரணம்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதிலும் நாம் உறுதியாகவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# கிராண்ட்பாஸ் சம்பவம்; 3 பேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் குறித்து 3 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரே குறித்த மூவரையும் கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் மீதான தாக்குதல்கள் தொடர்பிலான விசாரணைகளுக்காகவே இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ-2)

# இந்திய உளவுத்துறை 4 நகரங்களில் தேடுவது யாரை?

இந்திய மத்திய உளவுத்துறைகளில் ஒன்று (பெயர் இப்போது குறிப்பிடப்படவில்லை) டில்லி, மும்பாய், கொல்கத்தா, ஹைதராபாத் ஆகிய நான்கு நகரங்களில் சல்லடை போட்டு தேடிக்கொண்டிருக்கின்றன. அவர்களுக்கு உதவியாக அந்தந்த மாநில பொலீஸ் துறையினரும் களத்தில் முழு வேகத்துடன் இறக்கி விடப்பட்டு உள்ளார்கள்.

**இவர்கள் தேடுவது யாரை?**

முகம் தெரியாத சில நபர்களை!

**காரணம் என்ன?**

மேலே குறிப்பிடப்பட்ட மத்திய உளவுத்துறைக்கு, கிடைத்திருக்கும் உளவுத் தகவல்களின்படி, இந்த நான்கு நகரங்களில் ஏதாவது ஒன்றில் 'அதிமுக்கிய நபர்' ஒருவர் குறிவைக்கப்படலாம். அந்த அதிமுக்கிய நபர் தொஞ்சம் பெரிய ஆள் என்பதும், அவருக்கு ஏதாவது நடந்து விட்டால் இந்தியா மிகப்பெரிய சிக்கலில் போய்நிற்கும் என்பதுதான் மத்திய உளவுத்துறையின் பரபரப்பு தேடலுக்குக் காரணம்.

**அந்த 'அதிமுக்கிய நபர்' யார்?**

முக்கியமான அமெரிக்க ராஜதந்திரி அல்லது, இந்தியாவிலுள்ள அமெரிக்கத் தூதரங்கள் ஒன்றில் பணிபுரியும் வி.ஐ.பி. என்று கிசுகிசுக்கப்படுகிறது உளவு வட்டாரங்களில்.

மேலே தொடர்வதற்கு முன் கொஞ்சம் பின்னணி தகவல்கள்:

கடந்த மாதம் இந்திய உளவுத்துறைக்கு உளவுத் தகவல் ஒன்று கிடைத்தது. "ஆபிரிக்காவை தளமாகக் கொண்டு இயங்கும் முஸ்லீம் தீவிரவாத அமைப்பு ஒன்று, இந்திய நகரம் ஒன்றில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் தற்கொலைத தாக்குதல் ஒன்றை நடத்த திட்டமிடுகின்றது" என்பதே அந்த உளவுத் தகவல்.

இந்த உளவுத் தகவல், மத்திய உளவுத்துறை மேல்மட்டத்திலும், உள்துறை அமைச்சகத்திலும் விவாதிக்கப்பட்டது. அப்போது, இதற்கான சாத்தியம் பெரிதாக இல்லை என்றே மத்திய உளவுத்துறை நம்பியது. இந்திய உள்துறை அமைச்சகமும் அதை ஏற்றுக் கொண்டது.

**இவர்களது நம்பிக்கைக்கு காரணம் என்ன?**

ஆபிரிக்காவில் இருந்து இயங்கும் தீவிரவாத இயக்கங்கள், இதுவரை தமது தாக்குதல்களுக்காக இந்தியா வரை வந்ததில்லை. அவர்கள் தமது தாக்குதல் களமாக இந்தியாவை பயன்படுத்துவதில்லை. இதனால், இந்த உளவுத் தகவல் குறித்து அக்கறை எதுவும் எடுக்கப்பட்டவில்லை. இந்தியாவிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தை அணுகி எச்சரிக்கவும் இல்லை.

ஆனால், அடுத்தடுத்த நாட்களில் நடைபெற்ற சில சம்பவங்கள் இந்திய உளவுத்துறையை நிமிர்ந்து உட்கார வைத்தது. விஷயம் இவர்கள் நினைப்பது போல லைட்டாக எடுத்துக் கொள்ளக்கூடிய விஷயமல்ல என்று யோசிக்க வைத்தது.

முதலாவது சம்பவம், இரு வாரங்களுக்கு முன், ஆகஸ்ட் 30-ம் தேதி வெள்ளிக்கிழமை, அல்-காய்தா ஆபிரிக்க பிரிவு அமைப்புகளில் ஒன்று, தமது இணையதளம் ஒன்றில் வெளியிட்ட ஒரு அறிவித்தல். அந்த அறிவித்தலில், "எதிரிகளின் இலக்குகள் மீது தாக்குதல்கள் ஆபிரிக்க பகுதிக்கு வெளியே மிக விரைவில் ஆரம்பிக்கப்படும்" என்று கூறியிருந்தார்கள். அத்துடன் மொட்டையான அந்த அறிவிப்பு முடிந்தது ஆபிரிக்காவுக்கு வெளியே எந்த நாடு என்று கூறப்பட்டிருக்கவில்லை. 'எதிரி' யார் என்பதோ, தாக்குதல் நடத்துவது யார் என்பதோ குறித்த விபரங்கள் ஏதுமில்லை.

அல்-காய்தா ஆபிரிக்கப் பிரிவு தாக்குதல் நடத்துகின்றது என்றால் நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது சதவிகிதம் அது அமெரிக்க இலக்குகளை குறி வைக்கும் தாக்குதலாகவே இருக்கும். அவர்கள் வழமையாக குறிவைப்பது, வடக்கு ஆபிரிக்க நாடுகளில், அமெரிக்க இலக்குகளைதான்.

இவர்கள் ஆபிரிக்காவில் இயங்கினாலும், இவர்களது ஆட்கள் உலகின் மற்றைய பகுதிகளிலும் பரவியுள்ளார்கள். சமீப காலங்களில் இவர்கள் சூடான், ஏமன் ஆகிய நாடுகளில் இருந்து, ஆபிரிக்காவுக்கு வெளியே தமது ஆட்களை அனுப்பி வைத்திருக்கிறார்கள் என்று சி.ஐ.ஏ. எச்சரிக்கை விடுத்திருந்தது.

அதையடுத்தே, பல நாடுகளில் சமீபத்தில் அமெரிக்க தூதரகங்கள் மூடப்பட்டன.

சி.ஐ.ஏ. எச்சரிக்கையை அடுத்து அமெரிக்க தூதரகங்கள் மூடப்படாத சில ஆசிய நாடுகளிலும், அமெரிக்க இலக்குகள் குறிவைக்கப்படலாம் என அமெரிக்க உளவுத்துறை சி.ஐ.ஏ. ஊகித்தது.

அவர்களால் ஊகிக்கப்பட்ட நான்கு ஆசிய நாடுகளிலும், இந்தியா இல்லை. இந்தோனேசியா, பிலிப்பீன்ஸ், ஜப்பான் மற்றும் தாய்லாந்து ஆகியவையே அந்த 4 நாடுகள். இங்கெல்லாம் அமெரிக்க படைகள் எதோ ஒரு வகையில் இருந்து இயங்குகின்றன. மேலே சொல்லப்பட்ட நான்கு நாடுகளிலும் உள்ள அமெரிக்க ராணுவத்துடன் சம்மந்தப்பட்ட கட்டடங்களுக்கு அதிதீவிரமான பாதுகாப்பு கொடுக்கப்பட்டது. அந்த நாடுகளில் இருக்கும் அமெரிக்கத் தூதரகங்களின் பாதுகாப்பும் கடுமையாக்கப்பட்டது.

இவ்வளவையும் அமெரிக்கா செய்துவிட்டு என்ன நடக்கிறது என்று பார்த்து கொண்டிருந்தால், சந்தேகப்படும்படியான நடமாட்டங்கள் எதுவுமே நடைபெறவில்லை.

மாறாக, மத்திய கிழக்கு பகுதியில இருந்து, பாகிஸ்தான் எல்லை ஊடாக இந்தியாவுக்குள் சிலர் நுழைவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாக சி.ஐ.ஏ.வுக்கு தகவல் கிடைத்தது.

பாகிஸ்தான் எல்லை ஊடாக இந்தியாவுக்குள் தீவிரவாத அமைப்பினர் நுழைவது ஒன்றும் புதிய விஷயமல்ல. அவ்வப்போது நடப்பது தான். பாகிஸ்தானின் உளவுத்துறை ஐ.எஸ்.ஐ.யின் ஆசீர்வாதத்துடன், லஷ்கர் இ-தொய்பா, மற்றும் சில பாகிஸ்தானை தளமாக கொண்டு இயங்கும் தீவிரவாத அமைப்பினர் வருவதுதான் வழக்கம்.

அவர்களை இந்திய உளவுத்துறையினர் கவனித்து கொள்வார்கள் என சி.ஐ.ஏ. பெரிதும் அக்கறை காட்டுவதில்லை. அப்படியிருந்தும், இந்த விவகாரத்தில் சி.ஐ.ஏ. அக்கறை செலுத்தியதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

முதலாவது, இவர்கள் பாகிஸ்தானை தளமாக கொண்ட ஆட்கள் அல்ல. மத்திய கிழக்கில் இருந்து பாகிஸ்தான் வழியாக இந்தியாவுக்குள் வருகிறார்கள். இரண்டாவது, வழமையாக பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்குள் ஊடுருவும் ஆட்கள வரும் ஐ.எஸ்.ஐ. சேனல் ஊடாக வரவில்லை.

மாறாக, பாகிஸ்தானில் இருந்து இயங்கும் தலிபான் இயக்கம் ('தெஹறிக் ஐ-தலிபான் பாகிஸ்தான்' -வுவீ- அல்ல) ஒன்றின் ஊடாக நுழைய முயற்சிகள் செய்திருக்கிறார்கள்.

சம்மந்தப்பட்ட தலிபான் இயக்கத்தின் ஆட்களையே பாகிஸ்தான் ராணுவம் (அமெரிக்காவின் வேண்டுகோளின் படி) தேடித்தேடி கைது செய்து கொண்டிருக்கிறார் கள். அவர்களது நிலையே அப்படியிபபடியாக இருக்க, அவர்கள் எப்படி இவர்களை ரகசியமாக எல்லையைக் கடக்க வைத்து, இந்தியாவுக்குள் அனுப்புவது?

எனவே, பாகிஸ்தான் தலிபான்காரர்கள் தாமே நேரடியாக இறங்காமல், வேறு மூன்றாவது பார்ட்டி ஒன்றுடன், டீல் பேசியிருக்கிறார்கள். மத்திய கிழக்கில் இருந்து வந்தவர்களை எல்லையை கடந்து இந்தியாவுக்குள் அழைத்துச் செலவது குறித்து டீல் பேசியிருக்கிறார்கள்.

இங்கு நாங்கள் குறிப்பிடும் மூன்றாவது பார்ட்டி, விடுதலை இயக்கமோ, தீவிரவாத அமைப்போ அல்ல. ஆப்கான் பாகிஸ்தான் இந்தியா ரூட்டில் இயங்கும் Arms Runners.

அதாவது, ஆயுதம் கடத்தும் ஆட்கள். இன்னும் சிம்பிளாக சொனனால், கடத்தல்காரர்கள்!

இவர்கள் கடத்தல் செய்வது 100 சதவிகிதமும் பணத்துக்காக. தீவிரவாத அமைப்புக்களுக்கும் ஆயுதம் கடத்திக் கொடுப்பார்கள். பாக். உளவுத்துறை ஐ.எஸ்.ஐ.யிடமும் காசு வாங்கிக்கொண்டு, இந்தியாவின் எல்லைக்குள் ஆயுதங்களைக் கடத்திக் கொடுப்பார்கள்.

இப்படி இவர்களது 'யாதும் ஊரே' சித்தாந்தம் தெரியாமல், தலிபான அமைப்பு இவர்களை அணுகி, "பணம் தருகிறோம். மத்திய கிழக்கில் இருந்து வந்துள்ள தீவிரவாத அமைப்பின் ஆட்கள் சிலரை இந்தியாவுக்குள் ரகசியமாக கொண்டுபோய் விட முடியுமா?" என்று கேட்டிருககிறார்கள்.

அங்குதான் சறுக்கியது தலிபான்!

பாகிஸ்தான் தலிபான்காரர்கள், மத்திய கிழக்கில் இருந்து வந்த ஆட்களை இந்தியாவுக்குள் அழைதது் செல்வது குறித்து ஆயுதக கடத்தல்காரர்களுடன் டீல் பேசியது பற்றி முதல் பாகத்தில் எழுதியிருந்தோம். ஆயுதக் கடத்தல்காரர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா?

இவர்களுடன் பேரம் பேசுவது போல பேசிக்கொண்டு, இப்படியான விவகாரம் ஒன்று நடப்பதை பாகிஸ்தான் உளவுத்துறை ஐ.எஸ்.ஐ. யிடம் போட்டுக் கொடுத்துவிட்டார்கள்.

ஐ.எஸ்.ஐ., உடனே சுடச்சுட விஷயத்தை சி.ஐ.ஏ.வின் காதில் போட்டுவிட்டது. இந்தத் தகவல் வந்ததும் சி.ஐ.ஏ. ஒன்றும் ஒன்றும் இரண்டு என்பதுபோல, அல்-காய்தா ஆபிரிக்க பிரிவின் அறிவிப்பையும் இந்திய எல்லைக்குள் ஊடுருவ இவர்கள் எடுக்கும் முயற்சியையும்



ஒன்றாக முடிச்சுப்போட்டு, "ஆகா.. இவர்கள் இந்தியாவுக்குள் வைத்துத தான் விளையாட்டுக் காட்டப்போகிறார்கள்" என்று ஊகித்து விட்டார்கள்.

ஊகித்தது சரி. ஆனால் ஆட்களைப் பிடிக்க வேண்டாமா? அது தான் முடியவில்லை.

காரணம், அல்-காய்தா ஆபிரிக்க பிரிவு, தலிபான் அமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தியதே தவிர, தங்களது ஆட்களை மத்திய கிழக்கில் இருந்து அனுப்பவே இல்லை. இதனால் எல்லாமே பேச்சுக்களோடு நின்றதே தவிர, ஆட்கள் பாகிஸ்தானுக்கு வரவுமில்லை. எல்லைப்பக்கம் நடமாடவும் இல்லை.

கதை, சி.ஐ.ஏ.வைப் பொறுத்தவரை அந்த இடத்தில திரிசங்கு சொர்க்கத்தில் நிற்க, மத்திய கிழக்கு குழு ஓசைப்படாமல் வேறு ஒரு ரூட்டில் தனது ஆட்களை இந்தியாவும் உள்ளே அனுப்பிவிட்டது என்று உளவு வட்டாரங்களில் இப்போது கூறப்படுகிறது!

அந்த ரூட், மத்திய கிழக்கில் இருந்து (அநேகமாக துபாய் என கிறார்கள்) விமானம் மூலம் நேபாளத்தின் தலைநர் காத மண்டு வந்து, அங்கிருந்து, விமானம் மூலமாக ஒரு குரூப்பும், தரை எல்லையை கடந்து ஒரு குரூப்பும் இந்தியாவுக்குள் வந்தது என்று இப்போது தெரிகிறது.

சமீபகாலமாக நேபாளத்தில் இருந்து இந்தியாவுக்குள் ஊடுருவல் செய்வது அதிகரித்துள்ளது. சில வாரங்களுக்கு முன், நேபாள எல்லையில் வைத்து, அந்த நபர்களும், துபாயில் இருந்து தான் காத்மண்டு வந்து, இந்தியாவுக்குள் நுழைந்திருந்தனர்.

அவர்கள் ஐ.எஸ்.ஐ. தொடர்புடைய குரூப் என்பதால், இந்திய மத்திய உளவுத்துறைகள் அவர்கள் மீது கண்வைத்து, பிடித்தது. ஆனால், மத்திய கிழக்கில் இருந்து வந்த ஆபிரிக்க அல்-காய்தா ஆட்கள், இந்திய உளவுத்துறைக்கு புதிய ஆட்கள். இதனால், நேபாள இந்திய எல்லையில் இவர்களை கோட்டை விட்டது மத்திய உளவுத்துறை என்கிறார்கள் விஷயம் அறிந்தவர்கள்.

இப்படி சந்தடி சாக்கில் இந்தியாவுக்குள் நுழைந்தவர்கள், இந்தியாவுக்குள் மக்களோடு மக்களாக கலந்து போய்விட, ஆட்கள் எங்கே இருக்கிறார்கள் என்பது தெரியாமல் மத்திய உளவுத்துறையினர் தேடத் தொடங்கியிருப்பதே, தற்போது டில்லி, மும்பாய், கொல்கத்தா, ஹைதராபாத் ஆகிய நான்கு நகரங்களில் சல்லடை போட்டு தேடிக்கொண்டிருக்கும் விவகாரம்.

மத்திய உளவுத்துறை இந்த 4 நகரங்களிலும் "ஊடுருவிய தீவிரவாதிகளை தேடுகிறோம்" என்று சொல்கிறதே தவிர, தீவிரவாதிகள் யார்? எந்த குரூப்? என்றெல்லாம் கூறவில்லை என்பதை கவனியுங்கள்.

சரி. ஊடுருவல் இப்படி நடைபெற்றிருக்கலாம் என்று இந்திய உளவுத்துறையால் ஊகிக்கப்படலாமே தவிர, 100 சதவிகிதம் உறுதிப்படுத்தப்பட முடியாது அல்லவா? அப்படியிருந்தும் இவர்கள் இந்தியாவுக்குள் உள்ளார்கள் என்று எப்படி நம்புகிறது இந்திய உளவுத்துறை?

இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. முதலாவது காரணம், நேபாளத்தில் இருந்து கொல்கத்தா விமான நிலையத்துக்கு சந்தேகத்துக்கு இடமான சிலர் வந்ததாகவும், அவர்கள் யாருடைய பெயரும் உள துறை அமைச்சு தயாரித்த தீவிரவாதிகள் பட்டியலில் இல்லாத நிலையில், இந்தியக் குடிவரவு அதிகாரிகள் சில மணிநேரம் அவர்களை விமான நிலையத்திலேயே தடுத்து வைத்திருந்ததாகவும் கூறப்படுகிறது.

குடிவரவு அதிகாரிகள் தகவல் கொடுக்க, மத்திய உளவுத்துறையின ஆட்கள் சிலர் கொல்கத்தா விமான நிலையம் வரை சென்று இவர்களை விசாரித்திருக்கிறார்கள். அவரகளாலும் இந்தச் சந்தேக நபர்கள் பற்றி உறுதியான முடிவு ஏதும் எடுக்கப்பட முடியவில்லையாம்

எனவே, "கொஞ்சம் விட்டுப் பிடிக்கலாம்" என்ற பிளானில் இந்த ஆட்களை இந்தியாவுக்குள் அனுமதித்திருக்கிறார்கள். இந்தியாவுக்குள் இவர்கள் யாரைச் சந்திக்கிறாரகள், என்ன செய்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்ள மத்திய உளவுத்துறை தனது ஆட்களை ஏற்பாடு செய்திருந்ததாம்.

அதையடுத்து, நேபாளத்தில் இருந்து வந்து, கொலகத்தாவில் தங்கியிருந்த 'தீவிரவாதிகள்', மத்திய உளவுத்துறையின் ஆட்களால் கணகாணிக்க பட்டிருக்கிறார்கள்.

ஆனால், 24 மணி நேரத்துக்குள், மத்திய உளவுத்துறையின் ஆட்களுக்கு நூல் கொடுத்துவிட்டு, அவர்கள் கொல்கத்தாவை விட்டே இரவோடு இரவாக மாயமாகி விட்டார்கள். அதன் பின்னர்தான், இதையும், சி.ஐ.ஏ.யிடம் இருந்து கிடைத்த தகவலையும் முடிச்சுப் போட்டு, கொல்கத்தா ஊடாக வந்தவர்கள் அல்காய்தா ஆபிரிக்க பிரிவின் ஆட்களாக இருக்கலாம் என்று மத்திய உளவுத்துறை நம்புவதாக தெரிகிறது.

அது ஒரு காரணம் என்றால், இரண்டாவது காரணம் ஒன்றும் இருக்கிறது. சில தினங்களுக்கு முன்னர் ஹைதராபாத்தில் இருந்து மும்பாய்க்கு செய்யப்பட்ட ரகசிய ரேடியோ ட்ரான்ஸ்மிஷன் ஒன்று, மத்திய உளவுத் துறையால் ஒட்டுக் கேட்கப்பட்டதாம்.

அந்த ரேடியோ உரையாடலில், "பெரியபுள்ளி (Big shot)" என்பவரை குறிவைப்பது பற்றிக் கூறப்பட்டதாகவும், தூதரகம, விமான நிலையம் ஆகிய சொற்பதங்கள் உபயோகிக்கப்பட்டதாகவும் தகவல உண்டு.

இணையம்

# அன்னதானத்தின் பெருமை



ஆன்மீகம் 116

இந்த ஒருவேளை உணவையாவது அவர்களுக்கு போட முடிகிறதே!. என்றதோடு இதைப்போல் நாடெங்கும் உள்ள ஏழைகளுக்கு அன்னதானம் செய்தால் அது எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும். யோசித்துப் பார்! இதை என்னை மாதிரி பரதேசியே செய்யமுடிகிறதே? ஆனால் யாருக்கும் அந்த எண்ணம் இல்லையே! நாம் வரும்போது என்ன கொண்டு வந்தோம்! போகும் போது என்ன கொண்டு செல்ல முடியும்! அதை அவர்கள் சிந்திப்பதில்லையே! ஆடம்பரமாக வாழ்கிறார்கள். நிம்மதியாக அவர்களால் வாழ முடிகிறதா? ஏன் முடியவில்லை.? காரணம் தர்ம சிந்தனையில்லை. அரசாங்கத்திற்கு பொய் கணக்குக் காட்டி கருப்புப் பணத்தை குவித்து வைப்பவன் ஒரு நாள் அரசாங்க சோதனையில் அதனை இழந்து வேதனையில் வாடுகிறான். அவனுக்காக உண்மையாக உழைப்பவர்களுக்குக் கூடக் கொடுக்க மனமில்லாமல் சேமித்து வைத்தவன் அந்த உழைப்பாளிகளின் மனவேதனையைத்தான் சேமிக்கிறோம் என்பதை மறந்து போகிறான்.

உலகில் எதுவுமே நிலையில்லை. எல்லாமே மாறக்கூடியது மறையக் கூடியது. அழியக் கூடியதுதான். நந்தவனத்தில் ஓர் ஆண்டி, அவன் நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி கொண்டு வந்தானொரு தோண்டி அதை கூத்தாடிக் கூத்தாடி போட்டுடைத்தாண்டி. என்ற பாடல் கூறும் ஞானத்தை ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்த்து திருந்தி நடந்திட வேண்டும். ஆண்டவனிடம் வேண்டிப்பெற்ற இந்த வாழ்க்கையை மது, மாது, சூது என்று ஆடி அழிப்பது சரியா? விந்து விட்டவன் நொந்து கெட்டான் என்பார்கள்! குடி வாழ்வின் முடிவுக்கு வழி காட்டும். சூதும் வாதும் வேதனை செய்யும்! ஒன்றுக்கும் உதவாத கூடு இதை உற்றுப் பார்த்தால் வெட்கக் கேடு!



சித்தர் ஆச்சிரமத்தில் அன்னதானம் அளித்தல்

கால தச்சன் வெட்டி முறித்த மரம் போல் சாய்ந்து விட்டால் குடிமுழங்கி அழுவர். மயானம் குறுகியபால் எட்டி அடி வைப்பாரோ இறைவா! கச்சி ஏகம்பா! சதா பிறந்த இடத்தை நாடுதே மனம், கறந்த இடத்தை நாடுதே கண், என்றெல்லாம் சித்தர் மக்களுக்கு அறிவுரை கூறியும் கேளா செவியர்களாய் வாழலாமா?

அன்று மன்னர்கள் கட்டிவைத்த மகா ஆலயங்கள் இன்று கவனிப்பாரற்று அழிந்து கொண்டிருக்கிறது. இதை இந்துமதம், தங்கள் மதம் என்று சொந்தம் கொண்டாடி மார்தட்டுபவர்கள்கூட கவனிப்பதில்லையே ஏன் என்றால் அவர்கள் மதவாதிகள்! மதம் என்ற தேரில் ஏறி புகழுலகில் பவனி வருவது தான் அவர்கள் லட்சியம்! இவர்கள் காவி உடை அரசியல்வாதிகள்! புதிது புதிதாக கோயில்களை பெருமைக்காக கட்டுகிறார்கள். கான்கிரிட் கட்டடங்களை கோயில் என்று கூறுவது அறியாமையிலும் அறியாமையாகும். ஆகம விதிகளுக்கு மாறாக கட்டப்படும் இத்தகைய கோயில்களில் நிச்சயம் தெய்வ சக்தி இருக்காது. இதற்கான செலவை அவர்கள் வேறு நல்ல தானதர்மங்களுக்கு செலவிட்டிருந்தால் புண்ணியமாவது கிடைத்திருக்கும்.

உலகில் மனிதனுக்கு பொன்னாக அள்ளித் தந்தாலும் அவன் மனம் நிறையாது. இன்னும் கிடைக்காதா? என்ற குறைமனதுடன் தான் இருப்பான். ஆனால், அருசுமை விருந்தாயினும் அவர்கள் வயிறு நிரம்பிய பின் மேலும் ஒருபிடிகூட அவர்களால் சாப்பிட முடியாது. வயிறு நிறையும் போது மனமும் நிறைந்து விடுகிறது. போதும் போதும் என்று உணவளித்தோரின் உபசரிப்பை நிறுத்தி விடுவான். இதனால் தான் தானங்களில் சிறந்தது அன்னதானம் என்று சொல்கிறார்கள். தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம் என்று பாரதி பாடினானே ஏன்? அவன் ஒரு ஞானி அதனால் தான் அன்னதானத்தின் பெருமையை அப்படி பாடினான் என்று கூறிய சித்தர் அவர்கள் மீண்டும் பந்தியை கவனிக்கத் துவங்கினார்கள்.

(தொடரும்)

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

# மழை நின்ற பின்பும் தூறல் தொடர்கிறது



தமிழக மீனவர்களுக்கு அனுசரணையாக இல்லாமல் இலங்கை அரசுக்கே அனுசரணையாக இருக்கிறதாம் மத்திய அரசு. இத்தனை ஆண்டுகள் அலசி ஆராய்ந்த பின் ஆய்வு முடிவை வெளியிட்டிருக்கிறது அறிவாலயம்.

தூரத்தில் இருந்தவர்கள்நாங்கள். கருணாநிதியின் கூடாநட்பு எங்கள் இனத்துக்குக் கேடாய் இருந்ததால் கொஞ்சம் கோபத்தோடு பேசியிருக்கலாம். அதனால்தானோ என்னவோ, நாங்கள் உண்மையையே சொல்லியும் அவர் ஏற்கமறுத்தார். இது ஒரு யதார்த்தமான எதிர்விளைவாகவே இருந்து விட்டுப்போகட்டும்.

கூப்பிடு தூரத்தில் அகலாது, அணுகாது நின்றுகொண்டு நாங்கள் சொன்னதைத் தானே சொன்னார் சுப.வீரபண்டியன்! கொன்று குவிக்கப்படும் ஈழத்தமிழர்களுடன் காங்கிரசும் மத்திய அரசும் சேர்ந்து உடன்கட்டை ஏறிவிடும் என்றா சுப.வீரபாண்டியன் சொன்னார்? நான்கு ஆண்டுகள் கழித்துத்தான் வாழும் வள்ளுவருக்கு உண்மை புரிகிறது என்றால் என்ன அர்த்தம்?

2009 போர் நடந்தபோது இலங்கை அரசுக்கு இந்தியா உதவுவதாக சிலர் சொன்னதை தி.மு.க. நம்பவில்லை. இப்போது இலங்கைக்குப் போர்க்கப்பல் கொடுக்க இந்தியா முன்வருவதைப் பார்த்தால் இலங்கைத் தமிழருக்கோ தமிழக மீனவர்களுக்கோ இந்தியா அனுசரணையாக இல்லை, இலங்கைக்குத்தான் இந்தியா உதவுகிறது என்று சிலர் தொடர்ந்து கூறும் குற்றச்சாட்டு உறுதியாகிறது என்பது வா.வள்ளுவரின் வாதம்.

இலங்கைக்கு இந்தியா உதவுவது இருக்கட்டும்... யாருக்கு உதவ, நடந்தது போர் என்று சாதிக்கப் பார்க்கிறார் மு.க?

1983 ஜுலையில் நடத்திய இனப்படுகொலையை மூடிமறைக்க இனக்கலவரம் என்ற வார்த்தையைப் பயன்படுத்தியது இலங்கை. 2009 இல் நடத்திய இனப்படுகொலையை மூடிமறைக்க நடந்தது போர்தான் என்று புளுகுகிறது. அமெரிக்காவும் மார்க்சிஸ்ட்களும் ஆமாம்... ஆமாம் என்று பூசி மெழுகுகிறார்கள். அப்படிச்சொல்ல அவர்களுக்கு ஆயிரம் காரணம் இருக்கிறது. அவர்கள் சொன்னதை அப்படியே சொல்ல இவருக்கு என்ன காரணம்?

தவறாக நினைத்தாலும் பரவாயில்லையென்று எடுத்த எடுப்பிலேயே முன்னாள் முதல்வருக்கு மூன்று உண்மைகளைத் தெளிவுபடுத்திவிட வேண்டியிருக்கிறது.

1. இலங்கைக்கு இந்தியா அனுசரணையாக இருந்தது, இருக்கிறது- என்று சுற்றி வளைத்து மூக்கைத் தொடுவது ஒரு நேரடிக் குற்றச்சாட்டை நீர்த்துப்போக வைக்கும் முயற்சி. நடந்த இனப்படுகொலையில் இந்தியா கூட்டுக் குற்றவாளி என்பது அப்பட்டமான உண்மை. அந்தக் கூட்டுக் குற்றவாளியின் கூட்டாளி கருணாநிதிக்கு நடப்பது போரல்ல, இனப்படுகொலை என்பது 2009 லேயே தெரியாதா என்ன? முத்துக்குமாருக்குத் தெரிந்தது முத்தமிழறிஞருக்கு எப்படித் தெரியாதிருந்திருக்கும்?

2. இலங்கை அரசுக்குத்தான் இந்தியா உதவுகிறது என்று சிலர் சொன்னதை தி.மு.க. நம்பிவில்லை என்று சொல்லி தி.மு.க என்கிற இயக்கத்தின் பெயரைக் கேடயமாகப் பிடிக்கப் பார்ப்பது அப்பட்டமான மோசடி. இனப்படுகொலை நடந்தபோது கருணாநிதி அறிதுயிலில் ஆழ்ந்திருந்தது குடும்ப நலனுக்காகவும் பதவி நாற்காலிக்காகவும் அல்லாமல் வேறு எதற்காக? தான் செய்த துரோகத்துக்கான பழியைத் தன் இயக்கத்தின்மீது சுமத்தப் பார்க்கிறாரா? இனப்படுகொலை நடந்த போது கண்டும் காணாத கற்சிலை போல் இருந்துவிட்டு சிலர் சொன்னதை தி.மு.க. நம்பவில்லை என்று வசனம் பேசுவதன் மூலம் ஈழ மக்களை உண்மையாகவே நேசிக்கும் லட்சோபலட்சம் தி.மு.க தோழர்களை முட்டாளாக்கப் பார்க்கிறாரா? ஒருவேளை கருணாநிதி இப்போது சொல்வதுதான் உண்மையென்றால் காங்கிரஸ் கட்சியாலும் மத்திய அரசாலும் முட்டாளாக்கப்படும் அளவுக்குத் தனது அரசியல் முதிர்ச்சி இருந்தது என்பதை அவர் ஒப்புக்கொண்டதாக எடுத்துக்கொள்ளலாமா?

3. இலங்கைக்கு இந்தியா கொடுத்த ஆயுதங்களை விட ஆபத்தானதாக இருந்தது தன்னுடைய மௌனம்தான் என்பதையும் இனப்படுகொலைக்கு எதிராகப் போராடுவதுபோல் பாவலா காட்ட மட்டுமே தன்னுடைய நிஜமான எஜமானர்கள் தன்னை அனுமதித்தார்கள் என்பதையும் கருணாநிதி எந்தக் காலத்திலாவது மறைக்க முடியுமா? முழுமையாய்த் தன்னைப் புரிந்து வைத்திருக்கும் உடன்பிறப்புகளுக்கு இதெல்லாம் தெரியாது என்றா நினைக்கிறார் அவர்!

இது ஒருபுறம் இருக்க, தான் நடத்திய நான்கரை மணி நேர நாடகம் குறித்து மீண்டும் பேசியிருக்கிறார் கருணாநிதி. தமிழர் மீதான தாக்குதல் நிறுத்தப்படவேண்டும் என்று சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தாராம்... போரை இலங்கை நிறுத்துவிட்டதாகத் தகவல் கொடுத்து தனது உண்ணாவிரதத்தை முடித்துக்கொள்ள வைத்தது இந்தியா தானாம்! உண்ணாவிரதத்தை முடித்துக்கொள்ள வைத்தது இந்தியா என்கிறார் கருணாநிதி... சரி நீங்கள் உண்ணாவிரதத்தை முடித்த பிறகும் தாக்குதல் தொடர்கிறதே என்கிற கேள்விக்கு மழை விட்டபிறகும் தூவாணம் தொடர்கிறது என்று கண்ணியத்தோடு பதிலளித்த கனவான் யார்? கொல்லப்பட்டுக் கொண்டிருந்த மக்களைப் பற்றி கவலைப்படும் தொனியிலா இருந்தது அந்த நக்கல் பதில்!

போர் நின்றுவிட்டதாக கருணாநிதியிடம் பொய் சொன்னவர் சாதாரண நபரல்ல... மூத்த அமைச்சர் சிதம்பரம். மரண வளையத்தில் சிக்கிக் கொண்டிருந்தவர்களின் எண்ணிக்கையைக் கருணாநிதியிடம் பொய்யாகக் குறைத்துச்சொன்னவரும் சாதாரண நபரல்ல... அப்போது நம்பர் டூ ஆக இருந்த பிரணாப் முகர்ஜி. சிதம்பரப் பொய்யையும் பிரணாப் புளுகையும் பற்றி கருணாநிதி ஏற்கனவே சொல்லியிருக்கிறார் என்பதால் நமக்கு இது புதிதல்ல!

மத்திய அரசோ, காங்கிரஸ் கட்சியோ கருணாநிதியை அவரது தனிப்பட்ட விவகாரங்களில் ஏமாற்றியிருந்தால் அதைப் பற்றி நாம் கேள்வி கேட்டிருக்கப்போவதில்லை.

உதாரணமாக கனிமொழிக்கு வாக்களிக்கிறோம் என்று வாக்குறுதி கொடுத்த காங்கிரஸ் மாநிலங்களவைத் தேர்தலில் தே.மு.தி.க வேட்பாளருக்கு வாக்களித்திருந்தால் ஏன் எதற்கு என்று நானோ நீங்களோ கேட்டிருப்போமா? குறைந்தபட்சம் என்னுடைய அன்பு நண்பர்கள் அப்புசாமி, குப்புசாமி யாவது கேட்டிருப்பார்களா? இன்னும் சொல்லப்போனால் சுப்பிரமணியசுவாமிகூட அதைக் கேட்டிருக்கப் போவதில்லை.

புகழேந்தி தங்கராஜ் (தொடரும்)

# இறுதிக்கட்ட யுத்தத்தில் சரணடைந்தவர்களை இராணுவம் கொன்றொழித்துவிட்டதா?

## சுரேஷ் எம்.பி.கேள்வி

**(யாழ்ப்பாணம்)**

**இறுதிக்கட்டப் போரின் போது இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்களும் உறவினர்களினால் ஒப்படைக்கப்பட்டவர்களும் கொல்லப் பட்டிருக்கலாம் என்பதை இராணுவத்தினரின் பதில், தெட்டத்தெளிவாக சுட்டிக்காட்டி நிற்கின்றது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**




இராணுவத்தினர் போர்க்குற்றங்களை செய்ததாக ஏற்றுக் கொண்டதாகவும் போய்விடும் என்பதற்காக அதனை மறைக்க முற்படுகின்றனர் எனவும் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டு கடந்த நான்கு வருடங்களில் சுமார் 11 ஆயிரம் முன்னாள் விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த போராளிகள், புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இராணுவத்தினரிடம் எவரும் சரணடையவில்லை என இராணுவத்தினரால் வவுனியா மேல் நீதிமன்றில் கடந்த வியாழக்கிழமை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள் என்பதை தெட்டத்தெளிவாக காட்டிநிற்கின்றது. ஏனெனில் பல நூற்றுக்கணக்கானவர்கள் தமது பிள்ளைகள் தொடர்பாகவும் உறவினர்கள் தொடர்பாகவும் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணையின் போது இராணுவத்தினரிடம் தமது உறவுகளை ஒப்படைத்ததாக சாட்சியம் அளித்துள்ளனர்.

எனவே, தங்களிடம் யாரும் சரணடையவில்லை என இராணுவம் கூறுவது பொய்யானது.

அத்தோடு யாரும் சரணடையவில்லை என நீதிமன்றில் இராணுவத்தினர் கூறியதையும் ஏற்றுக் கொள்ளவும் முடியாது.

இன்றுகூட எத்தனையோ பொது மக்கள் தங்களது உறவினர்களை இராணுவத்தினரிடம் கையளித்ததாக எங்களிடம் நேரடியாக கூறுகின்றனர்.

ஆகவே, இராணுவம் நீதிமன்றில் கூறியது தவறான ஒரு பதிலாகும். மேலும் இப்பதில் சரணடைந்தவர்கள் உயிரோடு இருக்கின்றனரா? இல்லையா? என்ற சந்தேகத்தையும் உண்மையில் ஏற்படுத்தியுள்ளது.

இதனைவிட பல்வேறு விதமான சந்தேகங்களும் எழுந்துள்ளன. அதாவது இரகசிய முகாம்கள் இருப்பதாகவும் சொல்லப்படுகின்றது. அவை யாருக்கும் தெரியாது. பலர் இல்லாமல் போயிருக்கலாம்.

ஆனால், அவ்வாறு கூறினால் இலங்கை இராணுவம் போர்க்குற்றங்களைச் செய்ததாக ஏற்றுக் கொண்டதாகி போய்விடும்.

எந்த எதிரியாகயிருந்தாலென்ன, குற்றவாளியாகயிருந்தாலென்ன, அவர் சரணடைந்த பின்பு கொல்லப்பட்டால் ஐ.நா. சாசன விதிமுறைகளின் படி, அது பாரிய ஒரு குற்றமாகும். ஆகவே, இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் யுத்தத்தில் சரணடைந்தவர்களைக் கொலை செய் தமை மிக மிக பாரிய குற்றமாகும்.

ஆகவே, யாரையும் தாங்கள் கொலை செய்யவில்லை என்று கூறுவார்களானால் சரணடைந்தவர்கள் எங்கே என்பது தான் இப்போதுள்ள கேள்வி என்றார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் கலாநிதி சர்வேஸ்வரன், ஐங்கரநேசன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# மெட்ராஸ் கபே படத்திற்கு பிரித்தானியாவிலும் தடை

ஜோன்ஆபிரகாம் நாயகனாக நடித்துள்ள மெட்ராஸ் கபே படத்தை திரையிடுவதற்கு பிரித்தானியாவிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளை இழிவுபடுத்தி இத்திரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளதாக எதிர்ப்புகள் எழும்பின. 1990 ஆம் ஆண் டில் இலங்கையில் நடந்த போர் பின் னணியில் இதன் திரைக் கதை அமைக்கப்பட்டிருக்கிறது. விடு தலைப் புலி தலைவர் பிரபாகரன் யுத்த நடவடிக்கைகள், ராஜீவ் படுகொலை சதித் திட்டம் போன்றவை இதில் காட்சிப் படுத்தப் பட்டுள்ளன.

இந்தப் படத்தை தமிழகத்தில் திரையிடக்கூடாது என்றும் மீறி திரையிட்டால் திரையரங்குகளில் முற்று கைப் போராட்டம் நடத்துவோம் என்றும் தமிழ் அமைப்புகள் எச்சரித்தன.

இதையடுத்து, தமிழகத்தில் மெட்ராஸ் கபே திரைப்படத்தை திரையிட திரையரங்க அதிபர்கள் மறுத்துவிட்டனர்.

இதனையடுத்து வெளிநாடுகளிலும் மெட்ராஸ் கபே படத்தை திரையிட ஏற்பாடுகள் நடைபெற்ற போது, பிரித் தானியாவில் தமிழ் இளைஞர் அமைப் பினர் மெட்ராஸ் கபே படத்துக்கு எதிராக போராட்டம் நடத்தினார்கள். படம் திரையிடப்பட இருந்த திரையரங்குகளிலும் முற்று கையிட்டனர்.

மெட்ராஸ் கபே படத்தை தடைசெய்ய கோஷம் எழுப்பினர். படத்தின் சுவரொட்டிகளையும் தீயிட்டு எரித்தார்கள். இதையடுத்து படத்துக்கு அங்கு தடை விதிக்கப்பட்டது. (அ-2)




சங்கானை Butterfly International School ஆங்கில மொழிமூல பாலர் பாடசாலையின் கலை விழாவும் முத்தமிழ் விழா நிகழ்வும் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறார்களின் கலை நிகழ்வை படத்தில் காணலாம்.

# 31 பாடசாலைகளின் நேரத்தை நீடிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

நவம்பரில் பொதுநலவாய உச்சி மாநாடு நடத்தப்படும் காலத்தில் கொழும்பில் மூடப்படவுள்ள 31 பாடசாலைகளின் பாடசாலை நேரத்தை 3.30 மணி வரை நீடிக்குமாறு பாடசாலைகளிடம் கேட்கப்பட்டுள்ளது என்று இலங்கை ஆசிரியர் சங்கம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

மூன்றாம் தவணை பரீட்சைக்கு முன்னர் பாடத்திட்டத்தை பூரணப்படுத்துவதற்காக ஒரு பாடநேரத்தை 40 நிமிடத்திலிருந்து ஒன்றரை மணித்தியாலமாக அதிகரிக்குமாறு கல்வியமைச்சு பாடசாலைகளிடம் கேட்டுள்ளதென சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

மாணவர்களால் ஒரு பாடத்தில் நீண்ட நேரமாக கருத்தூன்றி படிக்க முடியாது.

எனவே, இது மிகவும் கடுமையான பிரச்சினையாகும் என்றும் அவர் மேலும் கூறினார். வேறு நிகழ்வுகளுக்காக அரசாங்கம் பாடசாலைகளை மூடுவது இதுதான் முதல் தடவை அல்ல. தேசத்துக்கு மகுடம் மற்றும் வேறு நிகழ்வுகளின் போதும் அரசாங்கம் இவ்வாறுதான் செய்தது.

இவற்றை வேறு இடங்களில் நடத்துவதே பொருத்தமானது. இவ்வாறான நிலைமையில் பொலிஸ் மாற்று வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டும். ஏனெனில் 'பாடசாலைகளை மூடுவதால் ஏற்படும் இழப்பை ஈடு செய்வது கடினமானது என்றும் ஸ்ராலின் கூறியுள்ளார். (அ-2)

# தம்புள்ள பள்ளிவாசல் விவகாரம்; ஜனாதிபதியின் பதிலுக்காக காத்திருப்பு

(கொழும்பு)

மாத்தளை மாவட்டம் தம்புள்ள பள்ளிவாசலை அகற்றுவது தொடர்பாக தற்போது எழுந்துள்ள பிரச்சினைக்கு ஜனாதிபதியிடமிருந்து உறுதியான பதிலை எதிர்பார்க்கும் வகையில் பள்ளிவாசல் நிர்வாகத்தினால் தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நண்பகல் ஜும்மா தொழுகையின் பின்னர் நடைபெற்ற பள்ளிவாசல் நிர்வாக சபை கூட்டத்திலே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தம்புள்ள புனிதபூமித் திட்டத்தின் கீழ் அடையாளமிடப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டத்தின் கீழ், நெடுஞ்சாலை விஸ்தரிப்புக்காக பள்ளிவாசல் அகற்றப்படவிருப்பதாக பள்ளிவாசல் நிர்வாகம் கூறுக்கின்றது.

ஏற்கனவே, முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் பள்ளிவாசல் அகற்றப்பட மாட்டாது என ஜனாதிபதி உறுதி வழங்கியுள்ளதாக அறிவித்திருந்தார்கள்.

ஆனால், ஜனாதிபதியின் அந்த உறுதிமொழியையும் மீறி தற்போது பள்ளிவாசலை அகற்றுவதற்கு அடையாமிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே இந்தத் தீர்மானத்தை தாங்கள் கூடி எடுத்ததாக பள்ளிவாசல் நிர்வாக சபையின் துணைச் செயலாளரான சாகுல் ஹமீத் மொகமட் ரவூப் கூறுகின்றார்.

மூன்று தினங்களுக்கு முன்னர் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அதிகார வாரியத்தினால் பள்ளிவாசல் எல்லைக்குள் அடையாளமிட்டப்பட்ட தடயங்களை இன்று அகற்றுவதற்கு குறித்த வாரியத்தின் அதிகாரிகள் அங்கு வந்த போது தங்களால் அதற்கு இடமளிக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவிக்கின்றார்.

பள்ளிவாசல் நிர்வாகத்தினால் இன்று எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தில் பள்ளிவால் அகற்றப்படுமா? இல்லையா? என ஜனாதிபதியின் பதிலை முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் எதிர்வரும் 21 ஆம் திகதி மாகாண சபை தேர்தலுக்கு முன்னதாக பெற்றுத் தர வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் இன்று பள்ளிவாசலுக்கு விஜயம் செய்து பள்ளிவாசல் நிர்வாகிகளுடன் தற்போது உருவாகியுள்ள பிரச்சினைகள் தொடர்பாக விபரங்களை கேட்டறிவார்.

எதிர்வரும் வியாழக்கிமை அமைச்சரவை கூட்டத்தில் கலந்து கொள்ளும் போது ஜனாதிபதியின் நேரடி கவனத்திற்கு இதனைக் கொண்டு வருவதாக அவர் பள்ளிவாசல் நிர்வாகத்திடம் உறுதியளித்துள்ளார். (அ-2)

# பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்க வேண்டாம்

## ம.உ.கண்காணிப்பகம்

**எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பொது நலவாய நாடுகளின் உச்சி மாநாட்டில் பங்கேற்க வேண்டாம். இவ் வாறு பொதுநலவாய உறுப்பு நாடுகளிடம் மனித உரிமைகள் கண் காணிப்பகம் கோரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பில் பொதுநலவாய அமையத்திலுள்ள 54 உறுப்பு நாடுகளுக்கு நேற்று முன்தினம் கடிதம் ஒன்றை மனித உரிமைகள் கண்காணிப்பகம் அனுப்பி வைத்துள்ளது.

இம்மாநாட்டில் கலந்து கொள்ள தீர்மானித்துள்ள அரசாங்கங்கள் தமது அதிருப்தியை வெளிப்படுத்தும் வகையில் கீழ்மட்ட பிரதிநிதிகளை அனுப்ப வேண்டுமென மனித உரிமைகள் கண்காணிப்பகம் கூறியுள்ளது.

மனித உரிமை நிலைமை மோசமடைந்து வருவதாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை தலைமை அதிகாரி கூறியதை தொடர்ந்து இந்த மாநாட்டில் பங்கேற்பது இலங்கை அரசாங்கத்திற்கும் நீதிகோரும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் தவறான செய்தியை வழங்குவதாகும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பணியாளர் பிறாட் அடம்ஸ் கூறியுள்ளார்.

இலங்கையில் பொதுநலவாய உச்சி மாநாடு நடத்தப்படுவது மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக சீர்திருத்தங்கள் என்பவற்றை முன்னெடுக்கும் பொதுநலவாயத்தின் கடப்பாட்டின் மீது மிகுந்த சந்தேகத்தை தோற்றுவிக்கின்றது என்றும் அடம்ஸ் கூறியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்துக்காக நடக்கும் பிரசாரத்தில் பங்குபற்றுதலுக்கு பதிலாக பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் வீட்டிலிருக்க வேண்டும் எனவும் அதன் அடக்குமுறை கொள்கை மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பில் பகிரங்கமாக இலங்கை மீது அழுத்தம் பிரயோகிக்க வேண்டுமென்றும் அடம்ஸ் கூறியுள்ளார்.

(அ-2)

# புலிகளிடமிருந்து கூட்டமைப்பை காப்பாற்றியது படையினரே

## இப்படி கூறுகிறார் பாதுகாப்பு செயலர்

வடக்கில் தேர்தல் முடியும் வரை படையினரை முகாம்களுக்குள் முடக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரியிருப்பதை பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கண்டித்துள்ளார்.

யாழ்ப்பாண குடாநாட்டில் படையினரின் எண்ணிக்கை பாரியளவில் குறைக்கப்பட்டுள்ளது. போருக்கு பின்னரான நிலைமைகளை கருத்திற்கொண்டு இந்த எண்ணிக்கை குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந் நிலையில் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் படைகளை முகாம்களுக்குள் முடக்குமாறு ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ள செய்தியை கோத்தபாய கண்டித்துள்ளார்.

1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டதில் இருந்து படையினர் அங்கு நிலை கொண்டுள்ளனர். கடந்த 2009 ஆம் ஆண்டு வன்னி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதில் இருந்து அங்கும் படையினர் நிலை கொண்டுள்ளனர். எனவே, புதிதாக ஒரு கோரிக்கையை சம்பந்தன் விடுப்பது ஆச்சரியத்தை அளிக்கிறது என்று கோத்தபாய குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், படையினர் வடக்கை கைப்பற்றாவிட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னும் விடுதலைப் புலிகளின் கீழேயே செயற்பட வேண்டி இருந்திருக்கும் என்றும் கோத்தபாய சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# ஐ.நா.சபையில் உரையாற்ற 23 ஆம் திகதி ஜனாதிபதி பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை நியூயோர்க் பயணமாகவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மாநாட்டில் பங்கேற்று உரையாற்றுவதற்காகவே அவர் நியூயோர்க் செல்லவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியூயோர்க் செல்லும் மஹிந்த ராஜபக்ஷ அங்கு இந்திய பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்ட அரச தலைவர்களையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆறு நாட்கள் நியூயோர்க்கில் தங்கியிருப்பார் என்றும் அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ், நிமல் சிறிபால டி சில்வா மற்றும் டலஸ் அழகப்பெரும ஆகியோரும் அவருடன் செல்லவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# பார்வை பெற்ற மாணவன் ஆளுநருக்கு நன்றி தெரிவிப்பு




(யாழ்ப்பாணம்)

ஆளுநர் நிதியுதவி மூலம் பார்வை பெற்ற மாணவன் சொர்ணலிங்கம் கருமதன் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் சந்தித்து நன்றி தெரிவித்தார்.

இம் மாணவனுக்கு முழுமையாக பார்வையற்ற நிலையில் வட மாகாண ஆளுநரினால் 1.26 மில்லியன் ரூபா சத்திரசிகிச்சைக்காக இரண்டு கட்டங்களாக வழங்கப்பட்டது.

இதன்மூலம் இந்தியாவின் மும்பை மருத்துவமனையில் இர ண்டு கட்டங்களாக சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதன் பயனாக மாணவனின் ஒரு கண் பார்வை கிடைக்கப் பெற்றுள்ளது.

குறித்த மாணவன் 2012 ஆம் ஆண்டு க.பொ.த.(உயர்தரம்) பரீட்சையில் 3 ஏ சித்தி பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார பணிப்பாளர் கேதீஸ்வரன் குறித்த மாணவனின் தந்தை ஆகியோர் கலந்து கொண்டனர்.(அ-2)




- ❖1812 - நெப்போலியன் பொனபார்ட் தலைமையில் பிரெஞ்சுப் படைகள் மொஸ்கோவில் கிரெம்ளின் மாளிகையை அடைந்தனர்.
- ❖1821 - ஸ்பெயினிடமிருந்து கொஸ்டாரிக்கா, எல் சல்வடோர், குவாத்தமாலா, ஹொண்டுராஸ், நிக்கராகுவா ஆகியன கூட்டாக விடுதலையை அறிவித்தன.
- ❖1835 - சார்ள்ஸ் டார்வின் கடல் வழியே காலபாகசுத் தீவுகளுக்குச் சென்று உயிரினங்களின் படிவளர்ச்சிக் கொள்கை பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டார்
- ❖1862 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்புப் படையினர் வேர்ஜீனியாவின் ஹார்ப்பர்ஸ் துறையைக் கைப்பற்றினர்.
- ❖1873 - பிரெஞ்சு-புரூசியப் போர்: கடைசி ஜேர்மனியப் படையினர் பிரான்சை விட்டுப் புறப்பட்டனர்.
- ❖1916 - முதலாம் உலகப் போர்: சோம் என்ற இடத்தில் முதற்தடவையாக தாங்கிகள் போரில் ஈடுபடுத்தப்பட்டன.
- ❖1935 - ஜேர்மனியில் யூதர்களுக்கு குடியுரிமை சட்டபூர்வமாக மறுக்கப்பட்டது.
- ❖1935 - நாசி ஜேர்மனி சுவாஸ்டிக்காவுடன் கூடிய புதிய கொடியை அறிமுகப்படுத்தியது.
- ❖1952 - ஐ.நாவின் ஒப்புதலுடன் எரித்திரியா எதியோப்பியாவுடன் இணைக்கப்பட்டது.
- ❖1959 - நிக்கிட்டா குருசேவ் ஐக்கிய அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்ட முதல் சோவியத் தலைவர் ஆனார்.
- ❖1968 - சோவியத்தின் சொண்ட் 5 விண்கலம் ஏவப்பட்டது. சந்திரனைச் சுற்றி வந்து பூமியின் காற்று மண்டலத்தினுள் நுழைந்த முதலாவது விண்கலம் இதுவாகும்.
- ❖1975 - பிரெஞ்சுத் தீவான கோர்சிக்கா இரண்டு நிர்வாகப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது.
- ❖1981 - தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.

**பிறப்புகள்**

- ❖1254 - மார்க்கோ போலோ, இத்தாலிய நாடுகாண் பயணி (இ. 1324)
- ❖1857 - வில்லியம் டாஃப்ட், ஐக்கிய அமெரிக்காவின் 27ஆம் குடியரசுத் தலைவர் (இ. 1930)
- ❖1860 - மோக்சகுண்டம் விசுவேசுவரய்யா, இந்தியப் பொறியியலாளர் (இ. 1962)
- ❖1890 - அகதா கிறிஸ்டி, எழுத்தாளர் (இ. 1976)

**இறப்புகள்**

- ❖*1950 - மறைமலை அடிகள், தனித்தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்தவர், (பி. 1876).*

**சிறப்பு தினம்**

- ❖அனைத்துலக மக்களாட்சி தினம்

### மறைமலை அடிகள்



மறைமலை அடிகள் 1876 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் திகதி பிறந்த புகழ் பெற்ற தமிழறிஞர், தமிழ் ஆய்வாளர். உயர்தனிச் செம்மொழியாம் தமிழை, வடமொழிக்கலப்பின்றித் தூய நடையில் எழுதிப் பிறரையும் ஊக்குவித்தவர். சிறப்பாக தனித்தமிழ் இயக்கத்தைத் தொடங்கினார். பரிதிமாற் கலைஞரும் மறைமலை அடிகளும் தனித்தமிழ் இயக்கத்தின் இருபெரும் முன்னோடித் தலைவர்கள்.

இவர் நாகையில் புத்தகக் கடை வைத்திருந்த தமிழ்ப்புலமை மிகுந்த நாராயணசாமிப் பிள்ளை என்பவரிடம் தமிழ் கற்றார். 'சைவ சித்தாந்த சண்டமாருதம்' என்று புகழ் பெற்றிருந்த சோமசுந்தர நாயக்கரிடம் சைவ சித்தாந்தம் கற்றார்.

1905 இல் சைவ சித்தாந்த மகா சமாசம் என்ற அமைப்பைத் தோற்றுவித்தார். அதன் மாநாட்டுத் தலைமையையும் ஏற்றார். பல ஆண்டுகள் பேராசிரியராகப் பணியாற்றியபின், பல்லாவரத்தில் இராமலிங்க வள்ளலாரின் கொள்கைப்படி 22.04.1911 இல் "சமரச சுத்த சன்மார்க்க சங்கம்" தொடங்கினார்.

பின்னர் தனித்தமிழ் ஈடுபாட்டால் அதனைப் "பொதுநிலைக் கழகம்" எனப் பெயர் மாற்றினார். திருமுருகன் அச்சுக்கூடத்தை ஏற்படுத்திப் பல நூல்களை வெளியிட்டார். மணிமொழி நூல்நிலையம் என்னும் நூல்நிலையத்தை உருவாக்கினார்.

இவர் காலத்தில் பல புகழ் பெற்ற தமிழறிஞர்கள் வாழ்ந்தனர். மனோன்மணீயம் இயற்றிய சுந்தரனார், பெரும்புலவர் கதிரைவேலர், வி. கல்யாணசுந்தரனார், நாவலர் ச. சோமசுந்தர பாரதியார், 'தமிழ் தாத்தா' உ. வே. சாமிநாதையர், தணிகைமணி வ.சு.செங்கல்வராயர், ரசிகமணி டி. கே. சிதம்பரநாதர், பேராசிரியர் ச. வையாபுரியார், கோவை இராமலிங்கம், சுப்பிரமணிய பாரதியார், மீனாட்சி சுந்தரனார், பொத்தக வணிகரும் மனோன்மணீயம் ஆசிரியர் சுந்தரனாரின் ஆசிரியரும் ஆன நாராயணசாமி, 'சைவசித்தாந்த சண்டமாருதம்' என்று புகழப்பட்ட சோமசுந்தர நாயகர் என்று பலர் வாழ்ந்த காலம். இவர் 1950 ஆம் ஆண்டு செப்டெம்பர் 15 ஆம் திகதி மறைந்தார்.

# மீனவர் பிரச்சினை குறித்து ஜெயலலிதா மீண்டும் கடிதம்



தமிழக மீனவர் விவகாரத்தில் இலங்கை புதிய மூலோபாயங்களை கையாள்கின்றது என்று சுட்டிக் காட்டியுள்ள தமிழக முதல்வர் ஜெயலலிதா இலங்கை சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் மன்மோகன்சிங்கிடம் அவர் மீண்டும் வலி யுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் பிரதமருக்கு அவர் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விட யங்கள் வருமாறு,

தமிழக மீனவர்கள் பிரச்சினை தொடர் பாக நான் பலமுறை கடிதம் எழுதியும் ஆக்க பூர்வமான நடவடிக்கை எதுவும் இதுவரை யிலும் எடுக்கப்படவில்லை.

தமிழக மீனவர்கள் பாரம்பரியமாக மீன் பிடிக்கும் பகுதியில் மீன்பிடித்துக் கொண் டிருக்கும்போது இலங்கை கடற்படையின ரால் தாக்கப்படுவதும் சிறைபிடிப்பதும் தொடர் ந்து நடைபெறுகிறது.

இது தொடர்பாக தங்களுக்கு பலமுறை கடிதம் எழுதியிருக்கிறேன்.

இப்போது இலங்கை சிறைகளில் தமிழக மீனவர்கள் 97 பேர் அடைக்கப்பட்டுள்ள னர். அவர்களில் 21பேரை விடுதலை செய்து அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஆனால் அவர்கள் இன்னும் நாடு திரும்ப வில்லை. தமிழக மீனவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட 20 படகுகளும் இன்னும் திருப்பித் தரப்படவில்லை.

இலங்கையின் புதிய போக்கு மீனவர் களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் வகை யில் உள்ளது. மீனவர்களை நீண்டநாள் சிறை வைத்தி ருக்கும் இலங்கையில் செயல் கண்டனத்துக்குரியது.

இலங்கை சிறைகளில் உள்ள 97 மீன வர்களை உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சிறை பிடிக்கப்பட்ட மீனவர்களின் படகு களையும் திருப்பித் தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழக மீனவர்களின் பிரச்சினைக்கு மத்திய அரசு நிரந்தர தீர்வு காணவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. (அ-2)

## நவியம்மை கோரியது போல் பௌத்த கொடி அகற்றப்படாது

(கொழும்பு)

இலங்கைக்கு அண்மையில் விஜயம் செய்த ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை கோரி யது போன்று கொழும்பு சுதந்திர சதுக்கத் திலுள்ள பௌத்த கொடி அவ்விடத்தில் இருந்து அப்புறப்படுத்தப்படமாட்டாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

புத்தளம் நாத்தாண்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறி யுள்ளார்.

பௌத்த கொடியை அகற்றுமாறு செய்த யோசனையை மறந்து போன சிலர் ஒரு சிலையை அகற்றுமாறு கூறியமை குறி த்து மாத்திரம் கேள்வி எழுப்பி வருகின் றனர் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள் ளார்.

அதேவேளை நாட்டில் இன, மத வேறு பாடுகளை ஏற்படுத்தி சகவாழ்வை சீரழி க்க எந்த சக்திகளுக்கும் இடமளிக்க போவ தில்லை எனவும் நாட்டில் இனவாதத்தை தூண்டி நாட்டை அராஜக நிலைக்குள் தள்ள சிலர் முயற்சித்து வருகின்றனர் என் றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# முரண்பாடுகளை களைய நடவடிக்கை எடுங்கள்

## ஐ.தே.க.வலியுறுத்து

(கொழும்பு)

இன, மத முரண்பாடுகளைக் களைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஐக் கிய தேசியக் கட்சியின் முன்னாள் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் மீண்டும் இன மற்றும் மத முரண்பாடுகள் ஏற்படக்கூடிய அபாய நிலைமை ஏற்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக இடம் பெற்ற இன, மத முரண்பாடுகள் கவலையளிக்கும் வகை யில் அமைந்துள்ளன. வணக்கத் தலங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் கண்டிக் கப்பட வேண்டியவை.

பௌத்த மதக் கொள்கைகள். கோட்பா டுகளை அமுல்படுத்த வேண்டுமாயின் உண ர்வுகளைக் கட்டுப்படுத்தி பொறுமையுடன் செயற்பட வேண்டுமென அவர் வலியுறுத்தி யுள்ளார். (அ-2)

# சிரிய ஆதரவு படையினர் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தினர்

## ஆசாத்தை கண்டிக்கிறார் பான் கீ மூன்

மனித குலத்துக்கு எதிரான குற்றத்தை சிரிய ஜனாதிபதி ஆசாத் செய்துள்ளார்.

சிரியாவில் இரசாயன ஆயுதங்கள் பயன் படுத்தப்பட்டுள்ளன என ஐ.நா.சபை பொதுச் செயலாளர் பான் கீ மூன் குற்றம் சாட்டியு ள்ளார்.

சிரிய ஜனாதிபதியின் படையினர் டமாஸ் கஸ் அருகே கடந்த மாதம் நச்சுக்குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதில் ஆயிரத்து 429 பேர் உயிரிழந்தனர்.

இதையடுத்து ஐ.நா.ஆய்வாளர்கள் சிரி யாவில் சோதனை மேற்கொண்டனர். இச்சோ தனையின் ஐ.நா.அறிக்கை விரைவில் வெளி வரவுள்ளது என எதிர்பார்க்கப்படுவதாக பான் கீ மூன் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியுள்ள தாவது,

சிரியாவில் கடந்த ஒகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி பொதுமக்கள் மீது இரசாயன ஆயுதத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்று ஐ.நா. அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.


எனவே, சிரிய ஜனாதிபதி பசர் அல் ஆசாத் மனித குலத்திற்கு எதிராக இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தி குற்றம் இழைத் துள்ளார் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

சிரியாவிடம் உள்ள இரசாயன ஆயதங் களை ஒப்படைப்பது குறித்த பேச்சுவார்த் தையில் பங்கேற்க ஜனாதிபதி ஆசாத் மறுத் ததையடுத்து இந்த முடிவை பான் கீ மூன் வெளியிட்டுள்ளார்.

இதையடுத்து அடுத்த வாரம் என்ன மாறு தல்கள் நடக்குமோ என எதிர்பார்க்கப்படுகி றது.

சிரியா இரசாயன ஆயுதங்களை ஒப்ப டைப்பது குறித்து அமெரிக்கா மற்றும் ரஷ்யா இடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

வடக்கு மாகாண சபைத் தேர்தல் - 2013
யாழ்ப்பாண மாவட்டம்



எமது போராட்டத்தில்
இதுவரை இழந்த இழப்புகளை
அர்த்தமுள்ள உரிமை
அரசியலாக்க வாக்களியுங்கள்
5
ஈழமக்கள்
ஜனநாயகக் கட்சி
(ஈ.பி.டி.பி.)



ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்
(பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர்) (E-060)
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
X 5

வடமாகாண சபைத் தேர்தல் - 2013
யாழ். மாவட்டம்



மாறினால் மாறட்டும்
இல்லையேல் மாற்றுவோம்
தீமைகள் யாவையும்
கூண்டிலே ஏற்றுவோம்...!
இம்மானுவல் ஆனல்ட்
(இலங்கை தமிழரசுக் கட்சி யாழ். தொகுதி கிளைச் செயலாளர், முன்னாள் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர், விளையாட்டுப் பேரவைத் தலைவரும் அகில இலங்கை சமாதான நீதிவானும்)
பொங்குதமிழ் நாயகன்
வெற்றி பெற வாழ்த்துகின்றோம்...
-நண்பர்கள்
(E-059)
X 5
தமிழ் அரசுக் கட்சி (தமிழ் தேசியக் கூட்டமைப்பு)

வடமாகாண சபைத் தேர்தல்-2013
யாழ்ப்பாண மாவட்டம்



பா.கஜதீபன் (ஆசிரியர்)
தலைவர், இளைஞர் அணி,
தமிழரசுக் கட்சி.
17
தன்மானத் தமிழராய் வாழ
தனியுரிமை பெற்று வாழ
தாயகம் மீட்டிட- நாம் ஆதரிப்போம்
தமிழரசின் இளைஞர் தலைவரை!
(E/054)
இலங்கைத் தமிழரசுக் கட்சி
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)
X 17
இளைஞர் அணி சார்பாக
ப.தர்ஷானந், செயலாளர்
இளைஞர் அணி தமிழரசுக் கட்சி

# தமிழர் உரிமைகளை வென்றெடுப்பேன்

## ஐ.ஐ.முன்னணி வேட்பாளர் ஜெயந்திரன்



தந்தை செல்வா "இனி இறைவன்தான் தமிழ் மக்களை காப்பாற்ற வேண்டும்" என்று அன்று கூறியிருந் தார். நான் இறைவனால் தமிழ்மக்களுக்கு அனுப்பப்பட்டவன் என்பதை நன்கு உணர்ந்து கொண்டு இத்தேர்தல் களத்தில் இறங்கியுள் ளேன் என ஜனநாயக ஐக் கிய முன்னணி வேட்பாளர் அருள் ஜெயந்திரன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற் கண்டவாறு தெரிவித்தார். அவ்வறிக்கையில் ,

என்னை தமிழ் மக்களுக்கு வெளிப்படுத்து வது எனது கடமையாகும். என்னைத் தெரிவு செய்தால் தமிழர்க ளின் உரிமைகளில் பெரும் பாலானவற்றை, எனது ஆட் சிக்காலத்தில் பெற்றுக் கொடு ப்பேன் என்பதை உறுதியாக கூறுகின்றேன். இது மிகவும் கரடுமுரடான பாதை என்பது எனக்கு நன்கு தெரியும்.

ஆனால் என்னால் அதை சாதிக்க முடியும். இதனால் தான் "தமிழரின் உரிமை களை படிப்படியாக வென் றெடுக்கக்கூடிய துணிச்சல் மிக்க ஒரே வேட்பாளர்" நான்.

எமது கட்சியானது போரால் பாதிக்கப்பட்ட மக்களாலும் சகல இன. மத மக்களாலும் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (ரி.என்.எ) இரட்டை இலை இது. தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட ஓர் தமிழ் அரசியல் கட்சியாகும்.

எமக்கு ஆட்சிப் பொறுப்பைத தந்தால் நாம் கூறிய விடயங்கள் அனைத்தையும் எமது ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றுவோம். இல்லையேல் தட்டிக் கேட்கவோ தண்டிக்கவோ உங்களுக்கு உரிமை உணடு.

இக்கட்சி தனிப்பெரும் கட்சியாக 51 வேட்பா ளர்களை கொண்டுள்ளது. வடமா காணத தின் 5 மாவட்டங்களிலும் உணர்வுள்ள துடிப்பான இளைஞர்களை உள்வாங்கி, வேட்பாளர்களாக தெரிவு செயதுள்ளோம். எனது கட்சியில் ஜாதி பேதம் எதுவும் இன்றி சகல இனத்தவர்களும் வேட்பாளர்களாக உள்ளனர்.

இவற்றை வெளிப்படுத்த வேண்டியது எனது கடமை.

இவ்வளவு காலமும் தமிழ் மக்கள் யார் ஆண்டால் என வாழாதிருக்காது உங்கள் வாக்குகளைப் பயன்படுத்தி உங்கள் உரிமைக்காக தகுதியானவர்களுக்கு வாக்களித்து உங்கள் தலைவர்களைத் தெரிவு செய்வது உங்கள் கடமையென கூறி வைக்க விரும்புகின்றேன். (அ)

# முப்படைகளையும் வைத்து ஆண்டவர்கள் தமிழர்கள்!

## வேட்பாளர் கஜதீபன் தெரிவிப்பு



தமிழ் மக்களாகிய நாம் ஆண்டபரம்பரைஎமக்குயாரும் நிர்வாகம் கற்பிக்கத் தேவையில்லை. சில வருடங்களுக்கு முன்னர் கூட எமது தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன்முப்படைகளையும்வைத்து வடக்கு- கிழக்கை தனியொருவராக ஆட்சி செய்துள்ளார். அதையாரும்மறுக்கவோ, மறைக்கவோ முடியாதுஎன தமிழரசுக்கட்சியின்இளைஞர்அணித் தலைவரும் வேட்பாளருமான பா.கஜதீபன்தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு காலத்தில் உலகம் முழுவதையும் ஆட்சி செய்தவன் தமிழன். ஆழக்கடலெங்கும் சோழ மகாராஜன் அன்று ஆட்சிபுரிந்தான். அதேபோன்று சில வருடங்களுக்கு முன்னர் ஈழத்தை எங்கள் அண்ணன் கரிகாலனாகிய பிரபாகரன்முப்படைகளையும்அமைத்து சிறப்பாக ஆட்சி செய்தார். தமிழர்களாகிய நாம் ஆண்டபரம்பரை மீண்டும் ஆளநினைக்கின்றோம். அதில் என்ன தவறிருக்கின்றது?

அம்பாந்தோட்டையில் என்றால் என்ன கொழும்பில் என்றால் என்ன ஒரு சிங்களக் குடிமகன் தமிழ்க் கட்சிகளிலிருந்து நாம் வாக்குக் கேட்டால் போடுவானா? எமது வீட்டில் நடைபெறும் நிகழ்வுக்கு நாம் தானே தலைமை தாங்க வேண்டும். நடத்த வேண்டும். எமது பிரதேசத்திலுள்ள ஒரு சனசமூக நிலையமென்றால் என்ன விளையாட்டுக்கழகமென்றால் என்ன அந்தப் பிரதேசத்தைச் சார்ந்த ஒருவர் தானே தலைமை தாங்க வேண்டும். வேறு ஒருவர் தலைவராவது முறையல்லவே. நமது பிரதேசத்தை மட்டும் நாம் ஏன் ஆளக் கூடாது? எமது மக்கள் தன்மானமுள்ளவர்கள். தம்மைத் தாமே ஆள நினைப்பவர்கள். தமிழ் மக்களின் ஏகோபித்த ஒரே ஒரு தமிழ்க் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே அவர்கள் ஆதரிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. (அ)

# ஊழலற்ற நிர்வாகத்திற்கு எமக்கு ஆணை தாருங்கள்

## த.தே.கூ.முதன்மை வேட்பாளர் விக்கினேஸ்வரன்

நாம் வாக்களித்தாலும் வாக்களிக்காவிட்டாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெல்லுவது உறுதி என்று எண்ணுவது மடமையிலும் மடமை என ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளருமாகிய க.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மேலும் எமது வாக்காளர்களில் எண்பது சதவீதத்திற்கும் அதிகமானோர் தேர்தலில் இம்முறை வாக்களிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் தற்போது அதிகாரத்தில் இருப்பவர்கள் தான்தோன்றித்தனமாக செய்து கொடுக் கும் வேலை வாய்ப்புக்கள் சட்ட முறையற்றவை எனவும் வேறு பல வழிகளில் அவை பின்னர் பறிபோகலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எத்துணை பலத்துடன் என்னைத் தேர்ந்தெடுக்கின்றீர்களோ அத்துணை பலத்துடன் என்னால் சேவையாற்ற முடியும் என்பதை உங்கள் யாவருக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

எமது நிர்வாகத் திட்டம் பற்றிக் கூற நான் கடமைப்பட்டுள்ளேன். எமது நிர்வாகம் ஊழல ற்ற உயிருள்ள நிர்வாகமாக அமையும். சட்டத்தின் ஆட்சியை, நீதியின் ஆட்சியை, மனிதத்துவத்தின் ஆட்சியை நாம் நிலை நிறுத்துவோம். பழிவாங்கல் எமது பாணியல்ல. தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தி பொருளாதார மேம்பாடு, சுகாதார மேம்பாடு மற்றும் மிக முக்கியமாக கல்வி மேம்பாடு ஆகியவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து செயற்படவிருக்கின்றோம்.



கல்வியை மேம்படுத்துவது சம்பந்தமாக ஒரு முக்கிய கருத்தை கூற விரும்புகின்றேன். எமது மக்கள் கல்வியில் பேர் போனவர்கள். சரஸ்வதியின் கடாட்சம் பெற்றவர்கள். இன்றைய கல்வி நிலை மிகவும் ஒரு இக்கட்டான நிலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இலங்கையின் கல்வித் துறையில் அரசியல் புகுந்து அநாகரிகமான நடவடிக்கைகளுக்கு இடமளித்து வருகிறது. இந்த நிலையை மாற்றுவோம். மீண்டும் கல்வியில் உயர்ந்த சமுதாயத்தை அமைக்க நாம் பாடுபடுவோம். இதுதான் உங்களுக்குத் தரும் உறுதிமொழி. (அ)


# வடக்கு மாகாண சபைத் தேர்தல் 2013

## கிளிநொச்சி மாவட்டம்



தமிழினத்தின் மூத்த அரசியல் தலைவன்
எதையும் நேருக்கு நேர் உரைக்கும் நேர்மையாளன்
உள்ளும் புறமும் இருவேடம் புனையாப் போராளன்
கிளிநொச்சி மாவட்டத்தை தந்த சீராளன்
வஞ்சகத்தால் – பதவி மோகத்தால் பொய்யுரைத்து பழி புரிந்தோர் மத்தியில்
நெஞ்சில் உரமும் நேர்மைத் திறனும் மிக்கதோர்
ஆனந்தசங்கரி ஐயாவை
மாகாண சபைக்கு அனுப்பிவைப்போம்

**அன்புசால் கிளிநொச்சி மாவட்ட மக்களே!**
நீங்கள் நன்றி மறவாதவர்கள்
உண்மையை உணரும் திறத்தினர்
தர்மம் வெல்லவேண்டும் என்ற
கொள்கை கொண்டவர்கள்
ஆகையால் உங்கள் தெரிவு

**வீ.ஆனந்தசங்கரி**

X 2

கிளிநொச்சி மாவட்ட
தமிழர் மேம்பாட்டு அமையம்

| இலங்கைத் தமிழரசுக் கட்சி | | X |
|---|---|---|

| 1 | 2 (X) | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|

(EC/4996)

# தேர்தல் பிரசாரங்கள் 18 ஆம் திகதியுடன் நிறைவு

தேர்தல் பிரசாரங்கள் அனைத்தும் எதிர்வரும் 18 ஆம் திகதி நள்ளிரவு 12 மணியுடன் முடிபுக்கு கொண்டு வரப்பட வேண்டுமென தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அந்த வகையில் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் தேர்தல் தொடர்பில் கட்சிகளினாலோ சுயேச்சைக்குழுக்களினாலோ வேட்பாளரினாலோ வெளியிடப்படும் எந்தவொரு பிரசாரங்களையும் முன்னெடுக்க கூடாது எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதன்படி தேர்தல் பிரசாரங்கள் அரசியல் விளம்பரங்கள், அறிக்கைகளுக்கு எதிர்வரும் 18 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி முதல் பிரசுரிப்பதற்கும் ஒலி, ஒளி பரப்புவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளன. (அ-2)

# இசை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஆதரவற்ற சிறுவர்களுக்கு வாழ்வாதார உதவி வழங்கும் நோக்கில் இசைவானம் இசை மன்றத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இசை நிகழ்ச்சி இன்று பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அனைத்து ரசிகப் பெருமக்களையும் மைக்கல் விளையாட்டுக்கழகம் மாலுசந்திக்கு வருகை தருமாறு இசைவானம் இசைமன்ற நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (அ)

# குற்றச் செயல்களுக்கு ஆளும் கட்சியே முன்மாதிரி

குற்றச் செயல்களுக்கு ஆளும் கட்சியே முன்மாதிரியாக திகழ்கின்றது என ஜனநாயக கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இந்நாடு பின்நோக்கி நகர்ந்து செல்கின்றது. மக்களின் வாழ்க்கைச் செலவு வெகுவாக உயர்வடைந்துள்ளது. மக்கள் போலி வாக்குறுதிகளுக்கு ஏமாந்துள்ளனர். நாட்டில் வாழும் 98 வீதமான மக்களின் எதிர்பார்ப்புக்கள் வீழ்ச்சியடைந்துள்ளன.

அரசியல்வாதிகள் குறித்த மக்களின் நம்பிக்கை பாதிக்கப்பட்டுள்ளது. ரூபாவின் பெறுமதியும் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. குற்றச் செயல்களுக்கு அரசாங்கமே ஆதரவளித்து வருகின்றது எனவும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (அ-2)

# சதுரங்கப் போட்டி

புட்கி பாடசாலையின் சதுரங்க கழகத்தினால் நடத்தப்படும் புட்கி சர்வதேச சதுரங்க திறந்த போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை கம்பஹாவில் உள்ள அப்சரா ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 19 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரை தலா இரு சுற்றுக்களாகவும் 23 ஆம் திகதி ஒரு சுற்றுமாக மொத்தமாக ஒன்பது சுற்றுக்களாக இப்போட்டி இடம்பெறும்.

சதுரங்க போட்டியில் வடமாகாண சதுரங்க வீரர்கள் பங்கு பற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)


வட மாகாண சபைத் தேர்தல் -2013
யாழ். மாவட்டம்
இளைஞர் அமைப்பு
சுயேட்சைக்குழு - 01

அன்ரனி
( தலைவர் )
(முதன்மை வேட்பாளர்)
X 2
(E-038)
புறப்படுவோம் இளைஞர் அணியுடன்
எங்கும் செல்வோம் பந்தில் வெல்வோம்.
- எமது அணியை வெல்லச் செய்யுங்கள் -



வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ். மாவட்டம்

கார்த்திகேசு நடராசா
விந்தன் கனகரத்தினம் MMC
(யாழ்.மாநகர சபை உறுப்பினர்)
யாழ். மாவட்ட மக்கள் சேவைக்கு மகத்தான
ஒரு மனிதனாக வினைத்திறன் கொண்ட செயல்
வீரனாக இருந்து மக்களுக்காக
பணியாற்றக் கூடிய ஆற்றல் மிக்க சக்தியாக....
12
இலங்கைத் தமிழரசுக் கட்சி X 12
(E-016)



வடமாகாண சபைத் தேர்தல் - 2013
யாழ்.மாவட்டம்
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி

தமிழ் மக்களின் அரசியல்
அபிலாஷைகளை வென்றிட
ஐக்கிய இலங்கைக்குள்
அதிகார பகிர்வு கண்டிட
அளியுங்கள் உங்கள் வாக்குகளை
X
(EC/5044)
11
சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினரும்
தென்மராட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளரும்
குமாரு சர்வானந்தன் (சர்வா)



எமது மண் பறிபோவதைத்
தொடர்ந்தும் அனுமதிக்கலாமா?


எங்கள் மண்
உங்கள் தெரிவு
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி; தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
X 10
க.வி.விக்னேஸ்வரன்
ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர்

# பயங்கரவாத செயற்பாடுகளுக்கு புலம்பெயர் தமிழர்கள் ஆதரவு

## பாதுகாப்பு செயலாளர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

புலம்பெயர்ந்த தமிழர்கள் இலங்கையில் மீண்டும் பயங்கரவாத செயற்பாடுகளுக்கு ஊக்கமளித்து வருகிறார்கள் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய பத்திரிகையொன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்துள்ள இலங்கைத் தமிழர்கள் தங்கள் பிள்ளைகளை மட்டும் பாதுகாப்பாக உயர்நிலைப் பள்ளிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கல்வி கற்க அனுப்பிக் கொண்டிருக்கும் அதேவேளையில் இலங்கையிலுள்ள ஏழைத் தமிழ்க் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளை பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு தூண்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்த தமிழர்கள் நல்ல வசதியாகவும் நல்ல வருமானங்களுடனும் மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டு இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு தீங்கிழைக்கும் கொள்கையையே கடைப்பிடிக்கிறார்கள்.

இவ்விதம் சுயநலப்போக்கைக் கடைப்பிடிக்கும் புலம்பெயர்ந்த தமிழர்கள் இங்குள்ள தமிழர்களை தமிழ்த் தாயகத்துக்காக ஆயுதப் போராட்டத்தில் இறங்க வேண்டுமெனத் தூண்டுவது என்பது மன்னிக்க முடியாத குற்றமாகும் என்றும் தெரிவித்தார்.

நல்லிணக்கப்பாடு தொடர்பாக கருத்துத் தெரிவித்த பாதுகாப்புச் செயலாளர், இது தமிழர்களுக்கு இலகுவான செயல் அல்ல என்றும் வடக்கிலுள்ள தமிழர்களில் 55 சதவீதத்துக்கும் அதிகமானோர் நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் அமைதியாகத்தான் வாழ்கிறார்கள் என்றும் அவர்களுக்கு நல்லிணக்கப்பாடு ஒரு பிரச்சினையல்ல என்றும் கூறினார்.

தமிழர்கள் மட்டுமல்ல நாட்டின் பெரும்பான்மை சமூகத்தினரும் இந்நாட்டு மக்கள் ஒரே தேசத்து மக்களாக நல்லிணக்கப்பாட்டுடன் வாழ முடியும் என்பதை இப்போது எடுத்துக்காட்டியிருப்பதாகவும் கூறினார்.

இந்தப் போட்டியின்போது பாதுகாப்புச் செயலாளருடன் இணைந்து கொண்ட கே.பி. என்று அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் வெளிநாடுகளிலுள்ள புலம்பெயர்ந்த தமிழர்கள் பிரிவினைவாத எண்ணங்களைக் கைவிட வேண்டும் என்றும் அநாவசியமாக இலங்கையில் பிரச்சினைகளை ஏற்படுத்தாது இலங்கையில் தமது முதலீடுகளைச் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். (அ-2)

# 60 ஆயிரம் ரூபா பெறுமதியான மாடு திருட்டு

கரணவாய் கிழக்கு உப்பு வீதியில் மேய்ச்சலுக்குச் செல்லும் மாடுகள் திருடப்படுவதாக உரிமையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இப்பகுதியில் கடந்த 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மேய்ச்சலுக்காக திறந்து விடப்பட்ட 60 ஆயிரம் ரூபா பெறுமதியான பசுமாடு களவாடப்பட்டுள்ளதாக உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-9-60)

# யோகா பயிற்சி அறிமுகவுரை

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷியின் முழு நல வாழ்வுக்குமான மனவளக்கலை யோகா பயிற்சி சம்பந்தமான இலவச அறிமுக வுரையும் காயகல்பப் பயிற்சி குறித்த அறிமுகவுரை நிகழ்வும் நாளை திங்கட் கிழமை பிற்பகல் 3 மணிக்கு கைதடி நுணா விலில் அமைந்துள்ள அறவழி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அறிமுகவுரைகளை மூத்த பேராசிரியர் அருள்நிதி மா.உழவன் தங்கவேல், மன வளக்கலை பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல் ஆகியோர் வழங்கவுள்ளனர். (அ-5)

# தமிழ் கட்சிகளிடையே மோதலை உருவாக்க அரசாங்கம் முயற்சி

## யோகராஜன் எம்.பி. குற்றச்சாட்டு

தமிழ் கட்சிகளுக்கு இடையில் மோதல்களைத் தூண்ட அரசாங்கம் முயற்சிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

குறிப்பாக நுவரெலியா, மாத்தளை, கண்டி மாவட்டங்களில் தமிழ் அரசியல் கட்சிகளுக்கு இடையில் அரசாங்கம் மோதல்களை தூண்டி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் தெரிவித்துள்ளார்.

இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் வாக்குகளை துண்டாடி தமிழ் பிரதிநிதித்துவத்தை குறைப்பதே அரசாங்கத்தின் சூழ்ச்சித் திட்டம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, ஐக்கிய தொழிலாளர் காங்கிரஸ் போன்ற கட்சிகள் வீதியில் இறங்கி மோதிக் கொள்வதாக தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியே தமிழ் மக்களுக்கு சரியான தீர்வுகளை வழங்கியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை வலுப்படுத்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டியது அவசியமானதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் விஞ்ஞான பட்டமாணி நிகழ்ச்சித் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. க.பொ.த. உயர்தரத்தில் உயிரியல் மற்றும் கணிதவியல் பிரிவுகளில் எத்தனை தடவைகளிலேனும் தோற்றி 3 சித்திகளைக் கொண்டுள்ளவர்கள் இப்பட்டமாணிக்கு விண்ணப்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன் கொக்குவில் பிறவுண் வீதியில் அமைந்துள்ள யாழ். பிராந்திய நிலையத்திலும் கண்டி வீதி, 157 ஆவது மைல் கல்லில் அமைந்துள்ள கிளிநொச்சி கற்கை நிலையத்திலும் பெற்றுக் கொள்ள முடியும் என யாழ். பிராந்திய இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (அ-5)




# வட மாகாணசபைத் தேர்தல் - 2013
## முல்லைத்தீவு மாவட்டம்

## நா. ரட்ணராஜா
(ரட்ணா/பெத்தையா)

X 6



முன்னாள் முல்லை மாவட்ட
பொருளாதார அபிவிருத்தி அமைச்சின்
"நியாப்" திட்ட உதவியாளர்,
"என்றிப்" மற்றும் மீள் எழுச்சித்திட்ட
பிரதித் திட்டப்பணிப்பாளர்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னனி

# வட மாகாணசபைத் தேர்தல் - 2013
## கிளிநொச்சி மாவட்டம்

## அ.விஜயகிருஷ்ணன்
(விஜயன்)

X 2



முன்னாள்
பொருளாதார அபிவிருத்தி அமைச்சின்
"நியாப்", வடக்கின் துரித மீட்சித்திட்ட
மற்றும் மீள் எழுச்சித்திட்ட பிரதித் திட்டப்பணிப்பாளர்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னனி

பொய்க்கு ஆயிரம் வாய்களும் ஆயிரம் நாக்குகளும் இரும்பு போன்ற உறுதியான குரலும் உண்டு.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## யார்யார் வாய் கேட்பினும் மெய்ப்பொருள் காண்பது அறிவு

அறிவு என்பதற்கு பலர் பலவாறு விளக்கம் கொடுத்துள்ளனர்.

அறிவுக்கான விளக்கங்கள் பலவாறானதாக இருந்தாலும் அறியாப் பொருளை அறிவதே அறிவு எனப்படும். அறியாப் பொருள் எது? அறியாப் பொருளை அறிந்து கொள்வது மட்டும் அறிவாகுமா?

அறிவை மயக்கும் வகையில் பொய்யுரைகள், புனைப்புகள், கதைகட்டல்கள், இயற்றல்கள் என்றெல்லாம் பலவாறான கருத்துக்கள் வெளிவருவதுண்டல்லவா?

அவற்றையெல்லாம் அப்படியே நாம் நம்பிக் கொள்வது அறிவா என்ற கேள்விகள் எழுவது நியாயமானதே.

இங்குதான் அறிவு என்ற விடயம் ஆராயப்பட வேண்டியுள்ளது. அறிவு என்பதை ஆராய்வதற்கும் அதன் பரிமாணம் எம்மிடத்தில் எப்படி உள்ளதென்பதை தெரிந்து கொள்வதற்கும் சந்தர்ப்பம் உருவாகுவதும் அவசியம்.

அந்த வகையில் அறிவு என்றால் என்ன என்பதை உணர்வதற்கு இப்போது வடபகுதி மக்களுக்கு நல்லதோர் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

ஆம், வட மாகாணத்தில் இது தேர்தல் காலம். தேர்தல் பிரசாரம் என்றாலே, பொய்யுரைப்பது தவிர்க்க முடியாததாகி விடுகிறது.

பொய்யுரைக்கத் தெரியாதவர் அரசியல் வாதியாக இருக்க முடியாததென்றளவில் அரசியல் சின்னத்தனமாகி விட்டது.

இதோ! நான் தேர்தலில் குதிக்கப் போகிறேன். ஒரு பொய்யும் உரைக்காமல் உண்மையை மட்டும் உரைத்து நேர்மையாக வாக்குக் கேட்கிறேன் என்று ஒருவர் முன்வந்தால், அதனை நம்புவதற்கும் அவரை ஏற்பதற்கும் பொதுமக்கள் தயாரா? என்றுகேட்டால்இல்லையென்றேசொல்லவேண்டும்.

அப்படியானால் பொய்யுரை, புளுகுரை, இயற்றல்கள், கதைகட்டல்கள் இவற்றையே பொது மக்களும் நம்பகம் கொண்டுள்ளனர்.

ஆக, உண்மைக்கும் நேர்மைக்கும் இடமில்லாத போது, பொய்தான் தேர்தல் பிரசாரத்தின் மூலப்பொருளாக, முதன்மைப் பொருளாக அமைந்துவிடும்.

எனவே, தேர்தல் பிரசாரத்தில் கதைகட்டல்களுக்கும் இயற்றல்களுக்கும் பொய்யுரைப்புகளுக்கும் ஓரளவேனும் முடிவு கட்ட வேண்டுமாயின் பொதுமக்கள் உண்மையை நாடவேண்டும்.

ஒருவர் ஆற்றுகின்ற உரை அவரை மதிப்பிடுவதற்கு போதுமானதாகும்.

எனவே பொதுமக்கள் எந்தளவு தூரம் நேர்மையான–உண்மையான தேர்தல் பிரசாரங்களுக்கு வாக்களிக்கின்றார்களோ அப்போது தான் தேர்தல் என்றால்–அதற்கான பிரசாரம் என்றால் மக்களுக்கு உண்மையைக் கூற வேண்டும் என்ற உணர்வு தேர்தலில் போட்டியிடுபவர்களுக்கிடையே ஏற்படும்.

இங்குதான் அறிவு என்ற விடயம் மேலெழுகிறது.

ஆக இப்போது அறிவென்றால் அறியாப் பொருளை அறிதல் என்ற வரையறையிலிருந்து விலகி, மெய்ப்பொருளைக் காண்பது அறிவு என்ற வள்ளுவனின் வாக்கு அறிவுக்கான அடையாளப்படுத்தலாக அமைகின்றது.

ஆம்! அன்புக்குரிய மக்களே!! எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதே அறிவு.

ஆகையால் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் யார் என்ன பேசினாலும் அது தொடர்பில் நீங்கள் உணர்ச்சிவசப்படாமல் அவர்கள் கூறுவதில் இருக்கக்கூடிய உண்மையை ஆராய்ந்து அறிந்து கொள்ளுங்கள்.

எதிலும் மெய்ப்பொருளை நீங்கள் அறிந்து கொண்டால் பின்னர் ஏமாற்று வித்தைகளுக்கும் கபடத்தனங்களுக்கும் அறவே இடமில்லாமல் போகும்.

# அரசை ஆதரித்து வாக்களித்தால் இரண்டு மடங்கு உதவி செய்வேன்

## கிளிநொச்சி ரயில் சேவை ஆரம்பிப்பில் ஜனாதிபதி

வட மாகாண சபைத் தேர்தலில் அரச தரப்பை ஆதரித்து வாக்களித்தால் அந்தப் பகுதிக்கான உதவிகளையும், அபிவிருத்திப் பணிகளையும் அதிகம் செய்வேன் என்று தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார்.

கிளிநொச்சிக்கான ரயில் சேவையை நேற்று ஆரம்பித்து வைத்து, ஓமந்தையிலிருந்து முதலாவது பயணியாகக் கிளிநொச்சியைச் சென்றடைந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, அங்கு நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில், போரினால் அழிவுக்குள்ளான பிரதேசத்தின் தேவைகள் அனைத்தையும் வித்தைக்காரனைப்போல, தன்னால் உடனடியாகப் பூர்த்தி செய்ய செய்ய முடியாது என்றும் அதற்குத் தனக்கு போதிய கால அவகாசம் வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

### பணமில்லை

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கத்திடம் நிதியில்லை என்று தெரிவித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ,

இதனால் கடன்பெற்று இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரிவித்தார். இதனை அங்கீகரிக்காத எதிர்க் கட்சிகள் அரசாங்கம் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கடன்பெற்றிருக்கின்றது. உலக வங்கியிடமிருந்து கடன்பெற்றிருக்கின்றது. சீனாவிடமிருந்து கடன் பெற்றிருக்கின்றது. இந்தியாவிடமிருந்து கடன் பெற்றிருக்கின்றது என்று கடன் பெற்றிருப்பதைப் பற்றி பேசுகின்றார்கள். ஆனால் நாம் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு கடன் பெற வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்" என்றார் ஜனாதிபதி.

இருபத்துமூன்று வருடங்களுக்குப் பின்னர், நேற்றுச் சனிக்கிழமையன்று முதலாவது பயணிகள் ரயில் கிளிநொச்சியைச் வந்தடைந்திருக்கின்றது. இதனையடுத்து, கொழும்புக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் நாள்தோறும் மூன்று ரயில்கள் சேவையில் ஈடுபடும் என்றும், அடுத்த ஆண்டு முற்பகுதியில கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கான ரயில் சேவை ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

கிளிநொச்சி ரயில் நிலையத் திறப்பு விழாவில் போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்கம, இலங்கைக்கான இந்தியத் தூதுவர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர். (செ-11)

# சுன்னாகம் உப மின் நிலையம் ஜனாதிபதியால் ஆரம்பிப்பு

ஆயிரத்து 700 மில்லியன் ரூபாய் செலவில் மீள் நிர்மாணம் செய்யப்பட்ட உப மின் நிலையம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நேற்றைய தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

உப மின் நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டதன் மூலம் சுன்னாகம் மின்பரிவர்த்தனை நிலையம் தேசிய மின் மார்க்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் 132 ஆயிரம் வோல்ட்ஸ் கிளிநொச்சி-சுன்னாகம் மின்வழிப் பாதை மீள் நிர்மாணம் செய்யப்பட்டு சுன்னாகம் உப மின் நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கண்காணிப்பின் கீழ் நடைபெற்ற இத் திட்டம் அனுராதபுரத்திலிருந்து வவுனியாவுக்கும் வவுனியாவில் இருந்து கிளிநொச்சிக்கும் மற்றும் கிளிநொச்சியில் இருந்து சுன்னாகம் ஊடாக யாழ்ப்பாணத்திற்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியிலிருந்து சுன்னாகம் வரை சுமார் 68 கிலோமீற்றர் தூரம் கொண்டதாக இத் தேசிய மின்மார்க்க இணைப்பு காணப்படுகிறது. (செ-4,6)

# எனது பிள்ளையைக் காணவில்லை நீங்கள் என்ன கதைக்கிறீர்கள்?

## மகிந்தவின் கூட்டத்தில் கதறிய தாய்

(யாழ்ப்பாணம்)

எனது பிள்ளையினை காணவில்லை நீங்கள் என்ன கதைக்கின்றீர்கள்? என ஜனாதிபதியின் பிரசாரக் கூட்டத்தில் தாயொருவர் கண்ணீர் மல்க கதறியழுதுள்ளார்.

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெற்ற ஐககிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரசாரக் கூட்டத்தின்போதே இவ்வாறு தாயொருவர் அழுதுள்ளார்.

இவ் பிரசாரக் கூட்டத்தின்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழ்மொழியில் உரையாற்றிக் கொண்டிருந்தார்.

இதன்போது சனக் கூட்டத்தின் கரையில் இருந்த வயோதிபத் தாயொருவர் திடீரென பெரிதாக குரலெழுப்பி எனது பிள்ளையினை நான்கு வருடங்களாக காணவில்லை எனது பிள்ளையினை நான் பார்க்க வேண்டும் என பெரிதாக கூறியதோடு நீங்கள் என்ன கதைக்கின்றீர்கள் என ஜனாதிபதியினை நோக்கியவாறு கேட்டுள்ளார்.

இதனால் அப்பகுதியில் பெரும் சலசலப்பு ஏற்பட்டதோடு ஒரு தொகுதி மக்களின் கவனம் அப் பெண்ணின் மீது திரும்பியதனால் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவினர் அங்கு வந்து நிலைமையை சமாளித்தனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் வடக்குத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் பெயர் பொறிக்கப்பட்ட நீல நிற ரீ சேட்டினை அப பெண்மணி அணிந்திருந்தார்.

இப் பெண் நிற்றிருந்த இடத்திற்கு வந்த வேட்பாளரின் ஆதரவாளர்கள் ரீசேட்டினை கழற்றிவிட்டு வெளியேறுமாறு அப் பெண்ணை எச்சரித்தனர்.

இதேவேளை இப்பிரசாரக் கூட்டத்திற்கு அழைத்து வரப்பட்ட மக்கள் காலை 11 மணியிலிருந்து பிற்பகல் 4 மணி வரை ஜனாதிபதியின் வருகைக்காக நீண்டநேரம் அவதியுடன் காத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4,6)

# சர்வதேசப் பொறிமுறை அவசியம்; மனித உரிமை அமைப்புகள் விடாப்பிடி

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழு கூட்டத் தொடரின் முதல்நாள் அமர்வில் உலக நாடுகள் பல இலங்கை மனிதவுரிமை விவகாரம் சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்தை கடுமையாகச் சாடியிருந்த நிலையில், 2-ம் நாள் அமர்வில் சர்வதேச மனிதவுரிமை அமைப்புகள் பல இணைந்து இலங்கை அரசு மீது சரமாரியான குற்றச்சாட்டுகளை முன்வைத்தன.

அத்துடன் இலங்கையின் மனிதவுரிமை விவகாரங்களைக் கையாள்வதற்கு சர்வதேசப் பொறிமுறை அவசியம் என்றும் அவை வலியுறுத்தியுள்ளன.

மனிதவுரிமைகள் கண்காணிப்பகம், சர்வதேச மன்னிப்புச் சபை மற்றும் மனித உரிமைகளுக்கான சட்டத்தரணிகள் அமைப்பு உள்ளிட்ட மனிதவுரிமைகள் அமைப்புகளே இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக இவ்வாறு கண்டனங்களைத் தெரிவித்துள்ளன.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 24-வது கூட்டத் தொடர் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது. தொடக்க உரையாற்றிய ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை ஒரு நிமிடம் இலங்கை குறித்தும் உரையாற்றியிருந்தார். இலங்கைப் பயணத்தின் போது தன்னைச் சந்தித் தவர்கள் படையினரால் அச்சுறுத்தப்படுவதை அவர் வன்மையாகக் கண்டித்திருந்தார்.

இந்நிலையில், 2-ம் நாள் அமர்வின் போது சர்வதேச மனிதவுரிமைகள் அமைப்புகள் கருத்துகளை வெளியிட்டன. இதில் குறிப்பாக அனைத்து அமைப்புகளும இலங்கையின் மனிதவுரிமை நிலைவரங்களைக் கடுமையாகச் சாடியுள்ளன.

இலங்கையில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையைச் சந்தித்தவர்கள் படையினரால் அச்சுறுத்தப்பட்ட விவகாரம் உட்பட மனிதவுரிமைச் செயற்பாட்டாளர்கள் மீதான அரசாங்கத்தின் அடக்குமுறைகள், முஸ்லிம்கள் மீதான அச்சுறுத்தல்கள், சர்வதேச விசாரணைக்கான அவசியம் என இலங்கையில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் மனிதவுரிமை மீறல் கள் குறித்து சர்வதேச மனிதவுரிமை அமைப்புகள் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளன.

## முல்லை. மாவட்டத்தில்

# 3 ஆயிரத்து 76 பகுதிச்சேத வீடுகள் புனரமைக்கப்படாத நிலையில்

(முல்லைத்தீவு)

**முல்லைத்திவு மாவட்டத்தில் போரினால் சேதமாக்கப்பட்ட 3 ஆயிரத்து 76 வீடுகள் இன்னமும் புனரமைக்கப்படாத நிலையில் உள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித் துள்ளனர்.**



போரினால் இடம்பெயர்ந்து கடந்த 2009 ஆம் ஆண்டு மீள் குடியேற்றம் செய்யப்பட்ட இப்பகுதி மக்களின் சேதமடைந்த நிலையில் உள்ள பல வீடுகள் மூன்று வருடங் கள் கடந்த நிலையிலும் இன்ன மும் புனரமைப்புச் செய்யப்படா மையால் இவ் வீடுகளை வாழ்விட மாகக் கொண்ட குடும்பங்கள் மழை யில் நனைந்தும் வெயிலில் காய்ந் தும் பல சிரமங்களோடு வசித்து வருகின்றனர்.

முல்லை. மாவட்டத்தில் உள்ள ஆறு பிரதேச செயலர் பிரவுகளிலும் போரினால் சேதமடைந்த வீடுகள் இதுவரையில் புனரமைத்து கொடுக் கப்படவில்லை.

இதில் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 52, துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 42, ஒட்டு சுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 268, கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 147, புதுக்குடியிருப்பு பிரேதேச செயலர் பிரிவில் 713, வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் 854 ஆக 3 ஆயி ரத்து 76 வீடுகள் புனரமைக்கப் படாத நிலையில் உள்ளன.

யுத்தத்தால் அனைத்தையும் இழந்து சிரமப்படும் இம் மக்களுக்கு அரைகுறையாக சேதமடைந்த இவ் வீடுகளே தற்போது தஞ்சமளிக்கின் றன.

எதிர் வருவது மழைகாலமாகை யால் தமது விடயத்தில் உரியவர் கள் கரிசனை எடுத்து பகுதி பகுதியாக சேதமடைந்துள்ள வீடுகளை புனர மைத்துத் தர வேண்டுமென அப்ப குதி மக்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)




# நீர் வழங்கல் திட்டம் ஆரம்பித்து வைப்பு

(குருமன்காடு)

மஹிந்த சிந்தனையில் சுத்த மான குடிநீரை மக்களுக்கு வழங் கும் திட்டத்தில் வவுனியா நீர் வழங் கல் திட்டம் வவுனியாவில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம் பித்து வைக்கப்பட்டது.

இலங்கை அரசாங்கத்தினதும் ஆசிய அபிவிருத்தி வங்கியினதும் 5 ஆயிரத்து 800 மில்லியன் ரூபா நிதியளிப்பில் அமையப் பெறவுள்ள இக் குடிநீர் திட்டத்தின் மூலம் ஒரு இலட்சத்து பத்தாயிரம் பேர் சுத்தமான குடிநீரைப் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

சாஸ்திரி கூழாங்குளத்தில் இரு ந்து நாளொன்றுக்கு 12 ஆயிரம் கன மீற்றர் நீரை சுத்திகரிக்கக்கூடிய நீர் சுத்திகரிப்பு ஆலையை அமைத்து 21 கிலோ மீற்றர் நீளமான பிரதான நீர் பரிமாற்றக் குழாய் அமைக் கப்படவுள்ளது.

அத்துடன் 225 கிலோ மீற்றர் நீளமான விநியோக குழாய் அமைக் கப்பட்டு நெளுக்குளம், மரக்காரம் பளை, பூந்தோட்டம் ஆகிய இடங்க ளில் நீர்த்தாங்கிகள் அமைக்கப்ப டும். இவை மூலம் வவுனியா நகரத் திற்கும் நெளுக்குளம், மடுகந்தை, ஈரற்பெரியகுளம் மற்றும் சாஸ்திரி கூழாங்குளம் பகுதிகளுக்கும் குடி நீர் வழங்கப்படவுள்ளது.

குடி நீர்த் திட்டத்தின் ஆரம்ப நிகழ் வில் பிரதம அதிதியாக ஜனாபதி யின் ஆலோசகரும் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான எம்.எஸ். எஸ். அமீர் அலி கலந்து கொண்டது டன், அதிதியாக முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினர் கிஷோர், வன்னி மாவட்ட ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியின் அமைப்பாளர் சுமதி பால, பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் நீர் வழங்கள் அதிகார சபை யின் அதிகாரிகளும் கலந்து கொண் டனர். (ம-250)

## கும்பாபிஷேகம்

(குருமன்காடு)

வவுனியா பூந்தோட்டம் பகுதி யில் அருள் பாலித்து கொண்டிருக் கும் அருள்மிகு ஸ்ரீலஷ்மி சமேத நரசிங்க பெருமான் ஆலய மஹா கும்பாபிஷேக பெருவிழா நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இக் கும்பாபிஷேக கிரியைகள் சிவஸ்ரீ முத்து.ஜெயந்திநாத குருக் கள் தலைமையில் நடைபெறவுள் ளன. (ம-250)







வடமாகாண கல்வித் திணைக்களத்தின் கீழுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான மாகாண மட்ட கலைத்திறன் போட்டி அண்மையில் மு/மாங்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற போது...

(படங்கள்:- மல்லாவி செய்தியாளர்)

# சுகாதாரமற்ற முறையில் இயங்கும் உணவகங்கள்

## நடவடிக்கை எடுக்க கோரிக்கை

(மல்லாவி)

வவுனியா மாவட்டத்தில் உள்ள பல உணவகங்களில் சுகாதார மற்ற முறையில் உணவுப் பொருட்கள் பரி மாறப்படுவதாக நுகர்வோர் குறை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவது,

வவுனியா நகரப் பகுதி உணவ கங்கள் உட்பட கிராமப் புறங்களில் உள்ள சிற்றுண்டிச்சாலைகள் மற் றும் உணவகங்கள் அனைத்திலும் சுகாதாரமற்ற முறையிலே உணவு பரிமாறப்படுவது வழக்கமாகியுள்ளது.

உணவகங்களில் உணவு தயா ரிப் போர் சுகாதாரமற்ற அழுக்கடைந்த ஆடைகளை அணிந்திருப்பதோடு, அவற்றைக்கூட சீரானமுறையில் உடல் முழுவதும் மறையும் படியாக அணிந்து கொள்ளாது உணவு தயாரிப்பில் ஈடுபடுகின்றனர்.

மேலும் உணவு தயாரிப்போர், மற்றும் பரிமாறுவோர் தமது கை களையும் நகங்களையும் சுத்தமான நிலையில் வைத்து கொள்வதில்லை. குறிப்பாக சிற்றுண்டி வகைகள், இடி யப்பம், பிட்டு, தோசை போன்ற வற்றை உணவு பரிமாறும் உபகர ணங்களை கையாளாது கைகளா லேயே பரிமாறுவதும் நடைபெறு கிறது.

மேலும் உணவுப் பண்டங்களை பொதி செய்யப்படும் போது அச்சுத் தாள்கள் பயன்பாடு தடைசெய்யப் பட்டிருந்தும் அச்சுத்தாள்களையே பயன்படுத்துகின்றனர். குறிப்பாக குருமன்காடு சந்தியில் உள்ள உண வகங்களில் அச்சுத்தாள் பயன்படுத் தல் நடைபெற்று வருகிறது.

எனவே, இது தொடர்பாக வவு னியா நகரசபையின் சுகாதார பகுதி யினர் உரியநடவடிக்கைகளை எடுத்து சுகாதாரமான உணவு தயாரிப்புக் கும் விநியோகத்திற்கும் ஆவன செய்ய வேண்டுமென மக்கள் வேண்டு கோள் ஒன்றை முன்வைத்துள்ள னர். (ம-15)

## பிரசாரக் கூட்டம்

(மல்லாவி)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பரப்புரைக் கூட்டம் இன்று ஞாயிற் றுக்கிழமை பி.ப. 4 மணிக்கு ஒட்டு சுட்டான் சிவன் கோவில் முன்றிலில் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம் பந்தன், வடக்கு மாகாண சபையின் முதன்மை வேட்பாளர் க.வி.விக் னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப் பினர்கள் மாவை சேனாதிராஜா, சிவ சக்தி ஆனந்தன் உட்பட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பல பிரமுகர்கள் கலந்து கொள்வுள்ளனர். (ம-15)

## வவு.தமிழ்ச் சங்கம் நடத்தும் அருணகிரிநாதர் விழா

வவுனியா தமிழ்ச் சங்கம் நடத்தும் அருணகிரிநாதர் விழா இன்று ஞாயிற்றுக் கிழமை வவுனியா ஆதிவிநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் காலை 9.30 மணி முதல் தமிழ்ச் சங்கத் தலை வர் தமிழருவி த. சிவகுமாரன் தலை மையில் நடைபெறும். இவ்விழாவில் திருமுறை யோதல், தமிழ்வாழ்த்துப் பாடலை தமிழிசையரசி அருந்ததி சிவக்கொழுந்துவும் அவரது மாண வர்களும் நிகழ்த்துவர். தொடக்கவு ரையை வவு னியா இந்து மாமன்றச் செயலாளர் சிவநெறிப்புர வலர் சி.ஏ. இராமசாமி ஆற்றுவார். தொடர்ந்து பூந் தோட்டம் துர்க்கா அற நெறிப் பாட சாலை மாணவி மாணிக்கம் துஷாரா அருணகிரிநாதர் எனும் தலைப்பிலும் முத்திக்கொருவித்து என்னும் பொரு ளில் சைவப்புலவர் செ.குணபால சிங்கம் சிறப்புரையாற்றுவர். திருப்புகழ் இசையரங்கில் யாழ்ப்பாணம் அல் வாய் வேவிலந்தை முத்து மாரியம்மன் ஆலய ஓதுவார் இறையிசையரசு தம்பிராஜா சந்திரதாஸ் பாடுவார்.

சிறப்பு நிகழ்ச்சியாக அருணகிரி யாரின் பாடல்களின் ஆழம் அழகு காண் போம் என்ற தொனிப்பொரு ளில் இடம்பெறும் கருத்தரங்கத்தில் திருப்புகழ் பற்றி இந்து நாகரிகத்துறை ஆசிரியர் சிவகஜனும் கந்தரனுபூதி பற்றி தமிழ் மணி கே.கே. அருந்தவரா ஜாவும் கந்தரலங்காரம் பற்றி மன்னார் சைவக்கலை இலக்கியப் பெரு மன் றத்தின் தலைவர் சிவஸ்ரீ மஹா தர்மகு மாரக் குருக்களும் கந் தரந்தாதி பற்றி இந்து நாகரிக பாட சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் திருமதி வி.முரு கேசம்பிள்ளையும் திரு வகுப்பு பற்றி சிவதட்சணாமூர்த் தியும் கருத்துரை களை வழங்குவர். (அ-ம-250)

# வீட்டினுள் புகுந்து திருடிய சிறுவன்

(யாழ்ப்பாணம்)

பட்டப்பகலில் மிகவும் சூட்சுமமான முறையில் ஆட்கள் இல்லாத வீட்டினுள் புகுந்து தங்க நகை மற்றும் ஒரு தொகைப்பணம் என்பவற்றை திருடிச்சென்ற சிறுவன் பிரதேச மக்களிடம் அகப்பட்ட சம்பவம் சுன்னாகத்தில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தை அண்மித்த பகுதியில் வீட்டு உரிமையாளர் வெளியே சென்றிருந்தவேளை வீட்டின் கூரை வழியாக உள்நுழைந்த குறித்த பதின்ம வயது சிறுவன் தங்க நகைகள் மற்றும் ஒரு தொகைப்பணம், ஏனைய பொருட்கள் என்பவற்றை திருடி வீட்டின் பக்க கதவால் வெளியேறியுள்ளான்.

இதன்போது முன் கதவால் எவரும் நுழைய முடியாதவாறு உட்பக்கத்தால் கதவுக்கு சட்டத்தையும் இட்டுள்ளான்.

இந்நிலையில் குறித்த சிறுவன் திருடிய பொருட்களுடன் வீட்டு மதிலால் ஏறி வீதிக்கு வந்தவேளை அப்பகுதி மக்களால் சுற்றி வளைக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டுள்ளான்.

இதையடுத்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த சுன்னாகம் பொலிஸார் சிறுவனை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சிறுவனிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் குறித்த வீட்டில் தடயங்களை சேகரித்துள்ளனர்.

(செ-5)


யாழ்ப்பாணத்தில் 09.11.2013 இல் நடைபெறும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புகள்

IELTS BRITISH COUNCIL

We are “IELTS Registration Center for British Council ”



Speciality of British College of English

* கடந்த காலங்களில் எமது கல்லூரியில் கல்வி கற்றவர்கள் Band 8.5 வரை பெற்றிருக்கிறார்கள்
* இலங்கையில் IELTS பயிற்சி நிலையங்களில் தலைசிறந்த நிலையங்களில் ஒன்றென British Council ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிலையம் ஆகும்.

* நீங்கள் எந்தநேரம் வேண்டுமாலும் எமது கல்லூரிக்கு வந்து Listening Practice செய்ய முடியும் ஒவ்வொருவருக்கும் தனித்தனி Radio வும் Head Phone ம் தரப்படும்.
* எந்தநேரமும் எமது Library யையும் பயன்படுத்த முடியும்
* IELTS ஆசியரியர் பயிற்சியைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களினால் Saturday & Sunday விடே Speaking Practice தரப்படும்

(3943)

**வகுப்புக்கள் - 14.09.2013 ஆரம்பம்**

Course Schedule

Monday - Tues - Wed - Thursday - Friday

காலை 7.00 - 8.30 வரை 7.11.2013 வரை தொடர்ச்சியாக இந்த வகுப்புகள் நடைபெறும்

Our Target is Band 7 and above

For Registration and Further details Contact

BRITISH COLLEGE OF ENGLISH

# 192, Navalar Road, Jaffna. (பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

Tel: 021 222 0384 / 0778803887


# விண்வெளி...

உணவு வழங்கப்படுகிறது. அதற்காக அவர்களுக்கு 450 கிராம் உணவுக்கு 6 இலட்சம் ரூபா வரை செலவாகிறது.

எனவே, செலவை குறைக்க வீரர்களின் உணவுக்கு பூமியில் இருந்து 380 கி.மீ. தூரத்தில் உள்ள விண்வெளியில் பண்ணை அமைத்து அதில் கீரை வகைகளை பயிரிட 'நாசா' மையம திட்டமிட்டுள்ளது.

பின்னர் படிப்படியாக காய்கறிகளும் பயிரிட முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்குரிய பண்ணை அமைக்கும் வசதியை உருவாக்கும் இயந்திரங்கள் விரைவில் அனுப்பப்படவுள்ளன.

இந்த தகவலை சர்வதேச விண்வெளி ஆய்வு கூடத்தின் திட்ட விஞ்ஞானி ஹோவார்ட் லெவின் தெரிவித்துள்ளார். இந்த திட்டம் எதிர்வரும் டிசம்பரில் விண்வெளியில் தொடங்கப்படவுள்ளது. (செ-11)

## நன்றி நவிலல்

### அமரர் நாகலிங்கம் நாகரத்தினம்

எமது குடும்பத்தலைவரின் பிரிவால் நாம் துடித்தவேளை சகல வழிகளிலும் துணை நின்றோருக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் மற்றும் 14.09.2013 அன்று எமது இல்லத்தில் நடைபெற்ற எட்டுக் கிருத்திய கிரியைகளிலும் அதைத் தொடர்ந்து நடைபெற்ற விருந்துபசாரத்தில் கலந்து கொண்டோருக்கும் மற்றும் அனைவருக்குமாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சங்கானை, நிற்சாமம் (சி-4725) இங்ஙனம்: குடும்பத்தினர்


விரைவான தொழில் வாய்ப்பு. கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளில் ஜேம்/சொயட்/கோடியல்/பென்சில்/கோழி இறைச்சி / Water Bottle /ஆடை / பால்மா / கிளவுஸ் / PVC போன்ற தொழிற்சாலைகளில் உற்பத்தி உதவியாளர் / தரம்பிரித்தல் / பொதியிடல் / லேபல் பிரிவுக்கு ஆண் - பெண் 17-50 வயதினர் விரைவாகத் தேவை. உணவு, தங்குமிடம் குறைந்த கட்டணங்களில் அறவிடப்படும். சம்பளம் 18000/-, 25000/- மற்றும் 32000/-. வருகை தரும் நாளிலே வேலைக்கு சேர்த்து கொள்ளப்படுவீர்கள்.

தொடர்பு : **0775561883**

காரியாலயம் வவுனியா

(C-4714)



**மானிப்பாயில்...** பஜாஜ் மோட்டார் சைக்கிள் விற்பனை காட்சியறை

RRSC Motor Engineer

திறப்பு விழா அழைப்பு

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்டின் சேவை முகவர்

BAJAJ Distinctly Ahead

**றஞ்சித் மோட்டோர்ஸ்**



16-09-2013 நாளை மதியம் 12.00 மணியளவில் தமது காட்சியறையினைத் திறந்து வைக்கின்றனர்.

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியினால் இலங்கையில் எப்பாகத்திலும் விற்கப்படும் நியாய விலையிலேயே இங்கு கிடைக்கும்.

(எம்மிடம் கொள்வனவு செய்யப்படும் அனைத்து மோட்டார் சைக்கிள்களுக்கும் மேலதிகமாக இரண்டு சேர்வீஸ் வழங்கப்படும்)




இலவசம் - அன்றைய தினம் கொள்வனவு செய்யப்படும் மோட்டார் சைக்கிள்களுக்கு

- எலக்ரிக்கல் றைஸ் குக்கர்
- ஒரு சோடி முன் பிறேக் சூ
- ஒரு சோடி பின் பிறேக் சூ
- ஒரு ஒயில் கான்
- கெல்மெட்
- ஜாக்கட்

றஞ்சித் மோட்டோர்ஸ்,
றஞ்சித் றிப்பயறிங் அன் சேர்விஸ்
311, யாழ் வீதி, மானிப்பாய்.
தொலைபேசி : 0773107549, 0772269883, 0212255228

(C-4732)

# தெற்குப்போல் வட...

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரத்தில் உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தமிழில் உரையாற்றுகையில்,

நாம்எல்லோரும்ஒரே குடும்பந்தான். இந்த நாடு எல்லோருக்கும் சொந்தமான நாடாகும்.

பல ஆண்டு காலமாக நீங்கள பட்ட கஷ்டம் துக்கம் எல்லாம் எனக்குத் தெரியும். அந்த நிலை இப்போது இல்லை. நீங்கள் இப்போது நிம்மதியாக வாழ முடியும்.

30 வருட காலம் பின்னோக்கி போன உங்கள் பகுதி, வடக்கின் வசந்தத்தின் மூலம் அபிவிருத்தியடைந்து வருகின்றது.

தென்னிலங்கையில் இருக்கக் கூடிய அனைத்து உள்ளூராட்சிசபைகளுக்கும்மாகாண சபைகளுக்கும் இருக்கக்கூடிய அத்தனை அதிகாரங்களும் வடக்கிற்கு வழங்குவோம், வழங்கிக் கொண்டுள்ளோம், தெற்கு மக்களுக்கு வழங்கப்பட்டுளள அனைத்து சலுகைகளையும் வடக்கு மக் களிற்கும் பெற்றுக்கொடுப்பதே அரசாங்கத்தின் இலக்கு என தெரிவித்த ஜனாதிபதி வெற்றிலையின் வெற்றியே உங்கள் வெற்றி எனக் குறிப்பிட்டார். (செ-4,6)

# ஆண்ட...

ஏன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முதலமைச்சர் வேட்பாளராக தெரிவு செய்தனர் என தெரியவில்லை என கவலையுடன் தெரிவித்த ஜனாதிபதி ஆண்டவரே, கடவுளே! வடக்கில் புத்திஜவிகளே இல்லையா?, படித்தவர்கள் இல்லையா?, கல்விமான்கள் இல்லையா? எனவும் பிரசார மேடையில்ஆண்டவரை அழைதது கேள்வி எழுப்பியுள்ளார்.

பின்னர் தமிழ்த் தேசியக் கூட டமைப்பு தமிழ் மக்களிற்கு பெரிய துரோகம் இழைத்து விட்டதாகவும் ஜனாதிபதி குற்றஞ சாட்டியுள்ளார். (செ-4,6)

# ஆளும்...

போட்டியிட்ட 2 பேருமே ஆளும் கட்சியுடன் இணைந்தவர்களாவர்.

யாழ்துரையப்பாவிளையாட்டரங்கில் ஆளும் கட்சியின் பிரசாரக் கூட்டத்தின் போதுவருகைதந்துஇணைந்து கொண்ட இவர்களை வரவேற்ற ஜனாதிபதி மக்களுக்கு பணிபுரிய வந்தமைகாக நன்றி என தெரிவித்துக் கொண்டார். (செ- 6,4)

# சர்வதேச விசா...

ஆணைக்குழுவின் கூட்டத்தில் முன்வைக்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இந்த யோசனையுடன் சம்பந்தப்பட்ட சில விடயங்களை எதிர்வரும் 25 ஆம் திகதி ஆணைக்குழுவின் கூட்டத்தில் முன்வைக்க உள்ள வாய்மொழி மூலமான அறிக்கையில் வெளியிட தயாராக இருப்பதாக தெரியவருகிறது.

அதேவேளை சர்வதேச விசாரணையை கோரும்குறித்த யோசனை அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளின் உதவியுடன் முன்வைக்கப்பட உள்ளதாகவும் அதற்கு மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் பூரண ஆதரவை வழங்குவார் என்றும் ராஜதந்திர வட்டாரங்களின் அந்த தகவல்கள் கூறியுள்ளன.

இலங்கைக்கு எதிராக கடந்த மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் முன்வைக்கப்பட்ட யோசனையின் தொடர்ச்சியாக இருந்த யோசனை முன்வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (செ-11)


## உடனடி வேலை வாய்ப்பு 0772288243

சுவீடன் நாட்டை தலைமையாக கொண்டு இயங்கும் யாழ் கிளை நிறுவனத்திற்கு

1. விளம்பர, விற்பனை ஆலோசகர்
2. குழுத் தலைவர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் உள்ளன.

தகைமைகள் : கல்வித்தகைமை - O/ Level, 18 வயதிற்கு மேல்

நேர்முகத் தேர்வு :18 மற்றும் 19-ஆம் திகதி காலை 10 மணி தொடக்கம் 2 மணிவரை இடம்பெறும்.

இடம் : 187/30, யூனியன் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (3950)






JANUARY & SEPTEMBER 2014 ADMISSIONS

MERIT SCHOLARSHIPS OF UP TO £5000

The University of Bolton offers a wide range of undergraduate [BA/BSc/BEng/LLB] and postgraduate [MA/MSc/LLM/MBA] programmes in subject areas which include:

Business & Management • MBA • Project Management • Accountancy • Law • Criminology Counselling & Psychology • Community Studies • Education • Civil Engineering • Construction Management Quantity Surveying • Automobile Engineering • Mechanical Engineering • Mechatronics Motor Sports Technology • Advanced Materials & Textiles • Renewable Energy & Environmental Technologies Systems Engineering & Engineering Management • Graphic Design • Computing Games Design & Programming.......... and many more

Rajendra Sampat from the University of Bolton will be delivering presentations, conducting interviews and making SPOT OFFERS for undergraduate and postgraduate programmes for qualified students as outlined below:

Please bring proof of qualifications and all transcripts

COLOMBO: 20th & 21st SEPTEMBER 2013

| Friday, 20th September 11.00 am to 5.00 pm | Saturday, 21st September 11.00 am to 5.00 pm |
|---|---|
| OVERSEAS EDUCATION CENTRE<br>102, A Horton Place<br>Colombo 7<br>M: 0094 773013060 / 0094 778246666 | A & B INTERNATIONALS (PVT) LTD<br>"Habitat House", 113 Dutugamunu Street<br>Kohuwala (10250)<br>Ph: +94 (0) 11 281 0789<br>M: +94 (0) 77 151 7269 |

(C-4721) 1901



## மின் உபகரணங்கள் திருத்துதல்

Washing Machine, Fridge, TV மற்றும் வீட்டு மின் உபகரணங்கள் அனைத்தும் உங்கள் வீட்டுக்கே வந்து திருத்திக் கொடுக்கப்படும். அத்துடன் வீட்டு வயரிங், திருத்த வேலைகளும் Bathroom, Commode, Hot Water, Shower திருத்த வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-

**0778000748** (3951)



## வடக்கு மாகாணசபைத் தேர்தல் - 2013




ஈழமக்கள் சனநாயக கட்சியின்
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர்

## சுந்தரம் டிவகலாலா

முன்னாள் செயலாளர், கல்வி, பண்பாட்டு, விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம்.

கல்வியின் ஊடாக அரசியல், சமூக, பொருளாதார மேம்பாடு.



## G.C.E (A/L) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே!

## AFTER A/L WHAT?

பல்கலைக்கழக கல்வி,
வேலைவாய்ப்பு,
வெளிநாட்டில் உயர்கல்வி,
ஏனைய கற்கை நெறிகளை
மேற்கொள்ள காத்திருக்கிறீர்களா?



ஆங்கில அறிவு இல்லாமல் இவை தெவமே சாத்தியப்படாது.

சர்வதேச தராதரத்திற்கு அமைய நவீன தொழில்நுட்பத்துடன் உங்களுக்காக எமது நிறுவனம் வழங்கும்

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**
(Quick Learning Course) (1 1/2 Months)

**DIPLOMA IN ENGLISH** (2 Months)

- இப்பாடநெறிகளை பூர்த்தி செய்பவர்கள் City & Guilds இன் English examக்கு தோற்ற முடியும்.
- British Council இனால் நடாத்தப்படும் Cambridge ESOL பரீட்சைகளுக்கும் தோற்ற முடியும்.
- Excellent Teachers' Panel & Individual attention
- எமது நிறுவனம் City & Guilds, British Council அங்கீகாரம் பெற்ற முகவர்கள்

Batch1:21.09.2013
Batch2:25.09.2013

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

BCHS

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna.

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287

Tel:0212224550 Hotlines: 0777585913, 0777222422, 0714299935, 0777730074

(C-4713)



இன்று 15.09.2013 திருமண பந்தத்தில் இணையும்
எமது நிறுவன இயக்குநர் மருத்துவர் **சுமன் - பிரவீனா** தம்பதியினரை

## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



தெய்வத் திருமகள் ரஞ்சினி தேவியோடு
தேவர் குலக்கொடி குவேந்திர நாதனுமாய்
மெய்தவம் செய்துபெற்ற மருத்துவ மைந்தன் சுமன்
மணவாசல் புகுந்தனன்

தோழமை உறவோடு தோள்தனைத் தந்துமே
வாழ்வினில் எமக்கொரு தொழில்தனைத் தந்தனன்
ஏழ்மையர் நிலைபோக்க ஏணியாய் நின்றுமே
ஊழியர் எமக்கெலாம் உறுதுணையாகினன்

மருத்துவத்துறை தனில் மகத்துவம் பெற்றுமே
மானிடர் குலத்திற்கு அருமருந்தாகினன்
பெருத்தநற் கல்வியால் பெருமைகள் சேர்த்துமே
பொருத்தமாய்த் துணையொன்றைத் தேடியே கொண்டனன்.

மணமாலை தோள் சுமந்து மனதாலே உறவு கொண்டு
மணவாளன் கைப்பிடித்தாள் பிரவீனா.
கனவாலும் பிரியாத வரமொன்றைத் தான்வேண்டி
மனம் போல மாங்கல்யம் பெற்றாளே!

நாட்டுக்கு பெருமை சேர்த்து நாணயமாய் வாழ்ந்திடவும்
வீட்டுக்குள் விரிசல் இன்றி கூட்டுறவாய் வாழ்ந்திடவே!
ஊருக்கு உவமை சேர்த்து உன்னதமாய் உயர்ந்திடவும்
உறவுகளின் மத்தியிலே உதாரணமாய்த் திகழ்ந்திடவே!

தகராறு அறியாத நிகரிலா இணையராகி
வரலாறு வாழ்த்துரைக்க வளமோடு வாழியவே!
பதினாறு வளம்பெற்று பலகோடி இன்பம் கண்டு
பலநூறு பல்லாண்டு பலமோடு வாழியவே!

**வாழ்த்துவோர் :** முகாமையாளர்கள், பணியாளர்கள்,
அஸ்வினி மல்ரிபிளாசா, கோண்டாவில் / கிளிநொச்சி.

(3937)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.